நாவாந்துறைப் படிப்பகம்


# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 31 செவ்வாய்க்கிழமை (15-08-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:193


## நவீன ஆயுதங்களின் உதவியுடன்

# யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்தி புலிகளை ஒழிக்க அரசு கங்கணம்!

## புதிய பிரதமர் சூளுரை

கொழும்பு,ஒகஸ்ட்15

**படையினருக்குத் தேவையான புதிய போர் விமானங்கள் மற்றும் நவீன ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் உதவியுடன் விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கடும் யுத்தம் ஒன்றை முன்னெடுத்துச் சென்று அவர்களை முற்றாக ஒழிக்க அரசு கங்கணம் கட்டியுள்ளது.**

**பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இவ்வாறு சூளுரைத்திருக்கின்றார்.**

கம்பளையில் நேற்று நடந்த வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு சூளுரைத்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டில் சமாதானச் சூழலை ஏற்படுத்த ஒரே வழி யுத்தம் தான். எனவே யுத்தம் தீவிரமாக முன்னெடுக்கப்படவேண்டியது அவசியம் ஆகும்.

இந்த யுத்தத்தை தீவிரத்துடன் முன்னெடுத்து விடுதலைப் புலிகளை முற்றாக ஒழிக்க அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காக நவீன போர் விமானங்கள், ஆயுதங்கள் போன்றவற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### 'ராகிங்' கொடூரத்தால் தாக்கப்பட்ட

## ஷாஜகானின் உடல் நிலை தேறி வருவதாகத் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக.15

'ராகிங்' கொடூரத்தினால் பாதிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட முதலாம் வருட மாணவன் இ.ஷாஜகானின் உடல் நிலை தேறிவருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதிப்புற்றிருந்த அவரது சிறுநீரகச் செயற்பாட்டிலும் முன்னேற்றம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிறிஸ்தவ பாதிரிமார்கள், சக மாணவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஷாஜகானின் உறவினர்கள், கிராமத்தவர்கள் எனப் பலரும் ஷாஜகானை ஆஸ்பத்திரியில் வந்து பார்த்து சுகம் விசாரித்துச் செல்வதைக் காண முடிகின்றது.

எனினும் அவரது விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட மாணவர்களும், கல்விசார் ஊழியர்களும் ஆஸ்பத்திரிக்கு வருகை தருவதையோ அவரது சுகத்தை விசாரிப்பதில் அக்கறையுள்ளவர்களாகக் காட்டிக் கொள்வதையோ பெரும்பாலும் தவிர்த்து வருவதை அவதானிக்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலும் 'ராகிங்'!

யாழ்ப்பாணம்,ஒக.15

வன்னியிலும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் 'ராகிங்' முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகப் 'புலிகளின் குரல்' வானொலி நேற்று மாலை அறிவித்தது.

தற்போது வன்னிக்குச் சென்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சிலர், யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள வன்னிப் பகுதியைச் சேர்ந்த புகுமுக மாணவர்கள் மீது மறைமுகமாக பகிடிவதை மேற்கொண்டு வருகின்றனர் என அறியமுடிகின்றது என்றும் அந்த வானொலி தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொள்ளும் ராகிங் சேஷ்டைகள் மக்களை விசனமடைய வைத்துள்ளன என்றும் அந்த வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

## குடும்பஸ்தர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,ஒக.15

கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் விறகு வியாபாரியான இளம் குடும்பஸ்தர் ஒருவர் மூச்சுத் திணறிய நிலையில் நேற்றிரவு ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நாரந்தனை வடக்கைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான எஸ்.காண்டீபன் (வயது 30) என்பவரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

இச்சம்பவம் குறித்துத் தெரிவிக்கப்படுவதாவது:-

மேற்படி விறகு வியாபாரிக்கும் நாரந்தனைப் பகுதியிலுள்ள தேநீர்க் கடை ஒன்றின் உரிமையாளர் ஒருவருக்கும் இடையில் சொந்த விவகாரம் காரணமாக நேற்றுப் பிற்பகல் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் -

இதனையடுத்து தேநீர்க் கடை உரிமையாளர் நாரந்தனைப் பகுதியில் கடமையிலிருந்த கடற்படையினருக்கு வாய்த்தர்க்கம் குறித்து முறையிட்டதைத் தொடர்ந்து விறகு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதர் இன்று பதவியேற்பு

கொழும்பு,ஒக15

இலங்கைக்கான இந்தியத் தூதுவராக கோபல் காந்தி இன்று பதவியேற்கின்றார்.

இதுவரைகாலமும் தூதராகப் பணியாற்றிய சிவ்சங்கர் மேனன் இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்தே இவர் பதவியேற்கின்றார்.

நேற்றுக் கொழும்பு வந்துசேர்ந்த அவர் இன்று உத்தியோகபூர்வமாகப் பதவியேற்கின்றார். (உ-3)

## ரூபா 6 கோடி நஷ்ட ஈடு

கொழும்பு,ஒக15

கொழும்பில் இருந்து வடபகுதி நோக்கி வந்த சமயம் பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதி தாக்கி அழிக்கப்பட்ட "மேக்ஸ் உகண" கப்பலில் கொண்டு வரப்பட்ட பொருள்களுக்கு 6 கோடி ரூபாவை நஷ்டஈடாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக "இலங்கை வானொலி" நேற்றுத் தெரிவித்தது. (உ-7)

## புலிகள் தரப்பில் மூவர் மரணம்

கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற இருவேறு சம்பவங்களில் தமது தரப்பில் மூவர் உயிரிழந்ததாக 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு அறிவித்தது.

சாவகச்சேரி பகுதியில் இடம்பெற்ற மோதலில் லெப்டினன்ட் தர்மிலன் (அரியரத்தினம் அன்ரன் றமணராஜ் - திருகோணமலை), குவேனி (வீரையா லட்சுமிவல்லி - வவுனியா) ஆகியோரும் -

சாவகச்சேரியில் இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் அபிராமி (குணரத்தினம் ஜெயச்சித்திரா-யாழ்ப்பாணம்) என்பவரும் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது. (உ-4)

## சிறிசேன கூரே மட்டு நகரில்

ஐ.தே.கவின் முன்னாள் பொருளாளர் சிறிசேன கூரே தலைமையிலான பிரஜைகள் முன்னணிக் குழு ஒன்று தேர்தல் நடவடிக்கைகள் குறித்து ஆராய நேற்று மட்டுநகருக்கு விஜயம் மேற்கொண்டது.

வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நோக்கில் கூரே பலதரப்பட்டவர்களுடன் கலந்துரையாடினார்.(3)

## இன்று கப்பல் சேவை

திருகோணமலை,ஒக15

திருகோணமலையில இருந்து 280 பயணிகளுடன் 'சிற்றி ஒவ் றிங்கோ' க்ப்பல் நேற்றுமாலை பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டது.

இன்று காலை பருத்தித்துறைக்கு வந்துசேரும் கப்பல் ஒரு தொகுதி பயணிகளை ஏற்றிக்கொண்டு இன்று மாலையே திருமலை நோக்கிப்புறப்படும்.

நாளை திருமலை வந்தடையும் இந்தக்கப்பல் அன்றே அங்கிருந்து ஒரு தொகுதிப் பயணிகளை ஏற்றிக் கொண்டு மீண்டும் பருத்தித்துறை நோக்கிப் புறப்படும். (உ-3)

## ஐ.தே.கவின் 10 எம்பிக்களும் சிங்கப்பூரிலிருந்து திரும்பினர்

கொழும்பு,ஒக15

அரசமைப்புச் சீர்திருத்தச் சட்ட நகல் மீதான வாக்கெடுப்பின்போது கட்சி மாறி வாக்களிப்பதைத் தடுப்பதற்காக சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்ட ஐ.தே.கவின் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்றுக் கொழும்பு திரும்பினர்.

அரசமைப்புச் சட்ட நகல் மீதான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் கடந்த எட்டாம் திகதி இடம்பெற இருந்த நேரத்தில் -

ஐ.தே.கட்சியின் தலைமையின் ஏற்பாட்டில் அந்தக் கட்சியைச் சேர்ந்த பத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்பது தெரிந்ததே.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னரே இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை இங்கு அழைத்துவர முன்னர் ஏற்பாடகியிருந்தது.

எனினும் அரசமைப்புச் சீர்திருத்தச்சட்டம் தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது என்பது தற்சமயம் உறுதியானதை அடுத்தே சம்பந்தப்பட்ட பத்துப் பேரும் கொழும்பு திரும் புவதற்கு ஐ.தே.கட்சி தலைமை அனுமதித்ததாகக் கூறப்பட்டது. (உ-3-6)

### அரசமைப்புச் சட்ட நகலை ஆதரிக்கக்கோரி

## எதிரணி எம்.பிக்களுக்கு லஞ்சம் வழங்க இந்தியா முயன்றது

ஜனாதிபதி சந்திரிகாவின் அரசு கொண்டு வந்த அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டத்துக்கு எதிர்க்கட்சி எம்.பிக்ககளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டதாகவும் -

அதற்காக எம்.பிக்களுக்கு லஞ்சப் பணம் கொடுக்கவும் முன்வந்ததாகவும் -

இந்திய அரசுக்கு எதிராகச் குற்றச் சாட்டுக்களும் விமர்சனங்களும் கிளம்பியிருப்பதாக "தமிழ் கார்டியன்" சஞ்சிகை தெரிவித்துள்ளது.

அரசமைப்புச் சீர்திருத்தத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான எம்.பிக்களின் ஆதரவை ஐ.தே. கட்சியிலிருந்து கட்சி தாவவைத்துப் பெற்றுத் தருவதற்கு ஆறு கோடி ரூபா வரை பணத்தையும், அதற்கு மேலதிகமாக சொகுசு வாகனங்கள், மேற்கு நாடுகளில் தங்கியிருப்பதற்கான நிரந்தர விசாக்கள் போன்றவற்றையும் அளிப்பதற்கு இந்திய ராஜதந்திரிகளும் புலனாய்வு அதிகாரிகளும் முன்வந்தனர் என்று ஐ.தே.கட்சி வட்டாரங்கள் தெரிவித்ததாக அந்தச் சஞ்சிகை குறிப்பிட்டது. (உ)

## வியாழனன்று ஐ.தே.கட்சி கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு,ஒக15

அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நாடாளுமன்றத் தேர்தலை நீதியான முறையில் நடத்தவும் கோரி ஐ.தே.கட்சி நாளை மறுதினம் வியாழக்கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளது.

ஐ.தே.கட்சியுடன் வீரவிதான இயக்கம், சிங்கள உறுமய, மக்கள் விடுதலை முன்னணி உட்பட பல்வேறு அமைப்புகள் இந்த ஆர்ப்பாட்டப்பேரணியில் பங்குபற்றும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை இந்தப் பேரணியில் கலந்து கொள்வதா, இல்லையா என்பது குறித்து ஜே.வி.பி. நேற்று வரை முடிவு செய்யவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

### தொலைத் தொடர்புச் சேவையைச் சீர்படுத்த

## 180 மீற்றர் உயரக் கோபுரம் பண்ணையில் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஒக.15

யாழ்ப்பாணத்தில் பண்ணையில் புதிதாக 180 மீற்றர் உயரத் தொலைத் தொடர்புக் கோபுரம் ஒன்றை அமைப்பதன் மூலம் யாழ்ப்பாணத்துக்கான தொலைத் தொடர்புச் சேவைகளை வழமைக்குக் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக ரெலிக்கொம் நிறுவனத்தின் வடக்கு - கிழக்கு மாகாணப் பிராந்தியத் தலைவர்எஸ்.கனக சூரியர்தெவித்தார்.

மன்னாரில் தற்போது அமைக்கப்பட்டுள்ள 120 மீற்றர் உயரக் கோபுரத்தையும் -

யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் பாரிய கோபுரத்தையும் -

டிஜிட்டல் நுண்அலை மூலம் இணைப்பதன் வாயிலாக குடா நாட்டில் தொலைத் தொடர்புச் சேவைகளை வழமைக்குக் கொண்டுவர முடியும் என்று அவர் நம்பிக்கை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தலைவர், செயலரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஸ்ரீ.ல.சு.க. மத்திய குழு நாளை கூடுகிறது

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தலைவரையும், புதிய செயலாளரையும் தேர்ந்தெடுப்பதற்காக அக்கட்சியின் மத்திய குழு நாளை கூடுகின்றது.

வயோதிபம் காரணமாக அரசியலிலிருந்து ஓய்வுபெற அக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தீர்மானித்திருப்பதாலும்-

நீண்ட காலம் கட்சியின் பொதுச் செயலாளராகப் பணியாற்றி வந்த தர்மசிறி சேனநாயக்கா மரணமானதாலும் -

இப்பதவிகள் வெற்றிடமாகியுள்ளன.

கட்சியின் உபதலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க கட்சியின் அடுத்த தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்படுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டதாகத் தெரிகின்றது.

புதிய பொதுச் செயலாளரைத் தெரிவு செய்வதிலேயே இழுபறி நிலை காணப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர்களான எஸ்.பி.திஸநாயக்க, கிங்ஸ்லி ரி. விக்கிரமரத்தின, அலவி மௌலான, மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் பெயர்கள் இந்தப் பதவிக்கு அடிபடுகின்றன.

ஜனாதிபதியுடன் இணைந்து நிற்கும் ஒருவருக்கே இந்தப் பதவியை வழங்க முனைப்பாகச் செயற்படுவதாகக் கூறப்படுகின்றது.

அமைச்சர் மங்கள சமரவீரவை இந்தப் பதவிக்கு நியமிக்க முதலில் முயற்சி எடுக்கப்பட்டதாகவும், ஆனால் அவர் அதை ஏற்க மறுத்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாளைய கூட்டத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவுசெய்தல் உட்படப் பல விடயங்களும் ஆராயப்படவிருக்கின்றன.

இதற்கிடையில் -

தேர்தல் உத்திகளை வகுத்தல், தேர்தல் விடயங்களுக்கு மாவட்ட ரீதியாக பொறுப்பானவர்களைத் தெரிவுசெய்தல் ஆகிய விடயங்கள் குறித்து தீர்மானிப்பதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக்குழு எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் கூடுகின்றது. முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளின் பிரதிநிதிகளையும் இக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ-ஐ-3)

# பௌத்த நாட்டை அழிவுக்குள்ளாக்கி நோபல் பரிசு பெற ஜனாதிபதி முயற்சி!

## சிங்கள உறுமய சிரேஷ்ட தலைவர் குற்றச்சாட்டு

பௌத்தர்களுக்குச் சொந்தமான இந்த நாட்டை அழிவுக்குள்ளாக்கி அதன் மூலம் நோபல் பரிசைப் பெற்றுக்கொள்வதை நோக்கமாகக் கொண்டே ஜனாதிபதி குமாரதுங்க செயற்பட்டு வருகின்றார்.

சிங்கள உறுமயவின் சிரேஷ்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லப்பா செல்லம்மா

நெடுங்குளம் வீதி, அரியாலையைச் சேர்ந்த செல்லம்மா அவர்கள் 13-08-2000 அன்று இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா அவர்களின் துணைவியும், காலஞ்சென்ற நமசிவாயம் (முன்னாள் கணக்காளர், கடன் வழங்கு சபை திணைக்களம்), காலஞ்சென்ற புவனேஸ்வரி, பாலசுந்தரம் (அரச நில அளவையாளர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் தாயாரும், கமலமலர் (லண்டன்), ஆ.சுப்பிரமணியம் (பிள்ளையார் கோயில், கைதடி), இந்திராணி ஆகியோரின் மாமியும், லண்டனைச் சேர்ந்த சுகந்தன், சிவகுமாரி, அருந்ததி, அரவிந்தன், காலஞ்சென்ற இளங்கோ, பிரான்ஸைச் சேர்ந்த ஈஸ்வரி, ஈஸ்வரன், கோணேஸ்வரி, சுமங்களா (கொழும்பு), சங்கரன் (பரியோவான் கல்லூரி), சங்கீதா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14-08-2000 அன்று கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ.பாலசுந்தரம்
(மகன்)

தற்போதைய முகவரி:
*127/14, கோவில் வீதி,யாழ்ப்பாணம்.*
*(நில அளவைக் காரியாலயம் அருகில்)*
(77308)

## செல்வி நாகையா ராதா

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும், பதுளையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி நாகையா ராதா 12-08-2000 சனிக்கிழமை பதுளையில் காலமானார்.

அன்னார் நாகையா தங்கரத்தினத்தின் அன்பு மகளும், தயா (பதுளை), தயாநிதி (பதுளை), கலாநிதி (லண்டன்), கமலாம்பிகை (டென்மார்க்), காலஞ்சென்ற ஜீவநாதன், ஜெயா, கண்ணன், கோமதி (பதுளை) ஆகியோரின் சகோதரியும், நேசரத்தினம் (பதுளை), விஜயபாலன் (லண்டன்), ரவீந்திரன் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13-08-2000 ஞாயிற்றுக்கிழமை பதுளையில் நடைபெற்றன.

அன்னாரின் நினைவாகச் சுதுமலையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (15-08-2000) செவ்வாய்க்கிழமை அவரது நினைவு நிகழ்வுகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்வண்ணம் வேண்டுகின்றோம்.

தகவல்:
மு.சண்முகம்
(மாமா)

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*
(C/12501)

## கிறிஸ்ரோபர் மனுவேற்பிள்ளை

(ஓய்வுபெற்ற அதிபர், சேமமடு)

தும்பளையைப் பிறப்பிடமாகவும், கரவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட கிறிஸ்ரோபர் மனுவேற்பிள்ளை 12-08-2000 சனிக்கிழமை மல்லாவியில் காலமானார்.

இவர் மேரி ஜெயசிங்கியின் அன்புக் கணவரும், பீற்றர் ஜெயசீலன் (ஆசிரியர், யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி.), ஜெயசீலி, ஜெயதாஸ், ஜெயந்தி (சுவிஸ்), ஜெயலதா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜோசப்தாஸ் அன்ரன் பொன்ராஜ்குமார் (சுவிஸ்), மேரி றஞ்சினி (ஆசிரியர், யா/வட இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், றோஜர், றோஜிதா, ஜோயலினி, ஜோய்சன், பிரகாஷ், பிலிப்ராஜ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், மேரிமாகிறேற், கிளாறம்மா ஆகியோரின் சகோதரரும், ஜெயராஜா, காலஞ்சென்ற மரியாம்பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்), ஜோசபின் புஸ்பராணி, துரைராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பீற்றர் ஜெயசீலன்

*கன்பொல்லை வீதி,*
*கரவெட்டி.*
(C/12500)

## திருமதி வேலாயுதம் சின்னம்மா

(உரும்பிராய்)

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த திருமதி வேலாயுதம் சின்னம்மா அவர்கள் நேற்று (14-08-2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சேதுப்பிள்ளை அவர்களின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா, வேலாயுதம் ஆகியோரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, இராசையா (முன்னாள் பிரதம லிகிதர்), தம்பையா, அரியகுட்டி, நல்லதம்பி, பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், திருமதி விக்கினேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி), Dr. க.நடேசலிங்கம் (U.K.), திருமதி Dr. யோகேஸ்வரி (D.M.O., போகவந்தலாவ), திருமதி நாகேஸ்வரி, காலஞ்சென்ற இ.இராசேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஏ.ஜெகதீஸ்வரன் (ஓய்வுபெற்ற உணவுக் கட்டுப்பாட்டு பரிசோதனை அதிகாரி), Dr.தர்மாம்பிகை (U.K.), Dr. அ.கதிரவேற்பிள்ளை (ஓய்வுபெற்ற பதில் முகாமையாளர், T.R.I., தலவாக்கொல), ந.பரமேஸ்வரநாதன் (முன்னாள் தேயிலை பதனிடும் உத்தியோகத்தர், காவத்தை) ஆகியோரின் மாமியாரும், திருமதி கோகிலா- கலாவண்ணன் (B.Sc. Eng., U.K.), ஜெ.வரதன் (Surveying Science Student, Sabragamuwa University), ஜெ.உத்தமன் (பழைய மாணவன், யாழ். மத்திய கல்லூரி), ப.பிரதீபா, க.சிவாந்தினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (15.08.2000) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி விக்கினேஸ்வரி ஜெகதீஸ்வரன்
(மகள்)

*"அன்னை இல்லம்,"*
*ஞானவைரவர் கோவில் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு.*
(77309)

# பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிப்பதே அரசின் முக்கிய இலக்கு

## பிரதமர் கூறுகின்றார்

கொழும்பு,ஓக15

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனின் பயங்கரவாத நடவடிக்கைகளை முற்றாக ஒழித்துக்கட்டுவதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க.

ஹொரணையில் நேற்று நடைபெற்ற பொதுவைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளில் சர்ச்சைகள் காணப்பட்டால் மகாசங்கத்தினருடன் கலந்துரையாடி அவற்றைத் தீர்த்துக்கொள்ள அரசாங்கம் தயாராகவுள்ளது.

அதே வேளை அரசமைப்பு சீர்திருத்த யோசனைகள் தொடர்பாக மகாசங்கத்தினர் மத்தியில் எழுந்திருந்த எதிர்ப்பு அலைகளை அவர்களுடன் உரையாடியதன் மூலம் நான் ஓரளவு தணித்துள்ளேன். இந்தப் பணிகளுக்காக அடிக்கடி கண்டிக்குச் சென்று மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்திக்கவும் நான் தயாராகவுள்ளேன் - எனப்பிரதமர் மேலும் தெரிவித்தார். (உ-7)

# இ.தொ.கா. அதிருப்திக்குழு எம்.பிக்கள் ஐவரும் வெளியேறுவது குறித்து நாளை முடிவு செய்வர்

கொழும்பு,ஓக.15

இ.தொ.காவின் அதிருப்தியாளர் குழுவில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவரும் இ.தொ.காவின் கீழ் தொடர்ந்து இருப்பதா அல்லது அதிலிருந்து வெளியேறுவதா என்பது குறித்து முடிவு செய்வதற்காக நாளை மறுதினம் வியாழக்கிழமை கூடவிருக்கின்றனர்.

அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் பி.பி. தேவராஜ் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமானையும் அதிருப்தியாளர் குழுவினரையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைத்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இரு தரப்பும் நேரடியாகப் பேச்சு நடத்தி ஒரு வார காலத்துக்குள் இணக்கம் ஒன்றுக்கு வரவேண்டும் என்று ஜனாதிபதி இரு தரப்பையும் கோரியிருந்தார்.

ஆனால் அத்தகைய இணக்கம் ஏற்படும் சூழ்நிலை காணப்படவில்லை என்று பி.பி. தேவராஜ் கூறுகின்றார்.

"அமைச்சர் தொண்டமான் தேவையற்ற குற்றச்சாட்டுக்களை எமது குழுவினர் மீது சுமத்தி வருகின்றார். சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சி எதனையும் அவர் மேற்கொள்ளவில்லை. இந்த நிலையில் எமது எதிர்காலம் குறித்து ஆராய நாளை மறுதினம் கூடவிருக்கின்றோம் - இப்படி அவர் மேலும் தெரிவித்தார் (உ-3-186)

## தேசிய சுவடியாக

# மகாநாயக்கர்களின் கடிதத்தை பாதுகாப்பதற்குக் கோரிக்கை

கொழும்பு,ஓக.15

உத்தேச அரசமைப்புக்கு எதிராக நான்குபீடங்களின் மகாநாயக்க தேரர்கள் அண்மையில் விடுத்த அறிவித்தல் தொடர்பான கடிதத்தின் நகல் ஒன்றை அரசின் தேசிய சுவடிகள் திணைக்களத்தில் பாதுகாத்து வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சிங்கள பூமிபுத்திர கட்சியின் தலைவர் ஹரிச்சந்திர விஜயதுங்க இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

உத்தேச அரசமைப்பு தொடர்பான விவாதம் ஒத்திவைக்கப்பட்டிருப்பது நாட்டுக்கு உகந்த அரசமைப்பை உருவாக்குவதற்கு மகாநாயக்கர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்கள் அனைவரும் ஏற்கக்கூடிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும்.

இப்படி அவர் மேலும் கோரியுள்ளார். (உ-7)

## மட்டுவிலில் தாக்குதல்

கொழும்பு,ஓக15

மட்டுவில் வடக்குப் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் முகாம்கள் சிலவற்றை படையினர் நேற்று முன்தினம் பீரங்கித் தாக்குதல் நடத்தி முற்றாக அழித்துவிட்டனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் தரப்பில் 40 பேர் காயமடைந்தனர் எனவும் - அது தெரிவித்தது.

(உ-7)

## யாழ். குடாநாட்டில்

# எரிபொருள் விநியோகம் வழமைக்குத் திரும்புகிறது

யாழ்ப்பாணம்,ஓக.15

கடந்த பல மாதங்களாக யாழ். குடாநாட்டில் சீரற்று இருந்த எரிபொருள் விநியோகம் கடந்த வாரம் முதல் சீராக்கப்பட்டுள்ளதாக யாழ். பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போதிய பவுஸர்கள் இல்லாமையினால் யாழ்.மாவட்டத்துக்கான எரிபொருள் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டதுடன் தேவையான எரிபொருளை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டது என்றும் -

தற்பொழுது போதிய பவுஸர்கள் இருப்பதால் காங்கேசன்துறையிலிருந்து தேவையான அளவு எரிபொருளை எடுத்துவர முடிவதாகவும் -

அந்த அதிகாரி மேலும் கூறினார்

எரிபொருள் விநியோகம் சீர் செய்யப்பட்டதை அடுத்து எரிபொருள் நிலையங்களில் தினமும் காணப்பட்டு வந்த நீண்ட வரிசைகளை தற்பொழுது காணமுடியவில்லை.

ப.நோ.கூ.சங்கங்கள் மற்றும் எரிபொருள் நிலையங்களில் போதியளவு மண்எண்ணெய் கையிருப்பில் இருப்பதால் கறுப்புச் சந்தை வியாபாரமும் குறைந்துள்ளது.

இதேவேளை ஐந்து லட்சம் லீற்றர் மண்எண்ணெய் திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும், அதைக் களஞ்சியப்படுத்துவதற்கு இடவசதி இல்லாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தாச்சி ஆட்டம்

வலி.வடக்கு,ஓக.15

உடுவில் ஞானப்பிரகாசர் சனசமூக நிலைய வெள்ளி விழாவை ஒட்டி அதன் மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டத்தில் உடுவில் சிந்து வி.கழக அணியை எதிர்த்து நவாலி தென்றல் அணி மோதும். (உ-86)

ராஜா
(யாழ்ப்பாணம்)
அர்ஜுன், ரேவதி,
வடிவேல், மணிவண்ணன்
மற்றும் பலர் நடிப்பில்
சுபாஸ்
காட்சிகள்: 10-30, 2-00
(புதிய நேரம்)
(C/12325)

நாகம்ஸ்
சுன்னாகம்.
17-08-2000 வரை
ரஜனி, சௌந்தர்யா
நடிப்பில்
படையப்பா
(ரீ்ஸ்)
காட்சிகள்:
11.00, 2.30 (புதிய நேரம்)
(77238)

# தீவிரவாதிகளுக்கு தொடர்ந்து பாகிஸ்தான் ஆதரவளிக்கும்!

## சுதந்திரதினத்தில் முஷாரப் உறுதி



இஸ்லாமாபாத்,ஓக.15

ஜம்மு காஷ்மீரில் போராட்டம் நடத்தி வரும் இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப் போவதாக பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப் உறுதி தெரிவித்துள்ளார்.

நேற்று கொண்டாடப்பட்ட பாகிஸ்தானின் சுதந்திர தினத்தை ஒட்டி அவர் விடுத்த அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில் காஷ்மீரத் தீவிரவாதிகளிடம் பாகிஸ்தான் பரிவும் அக்கறையும் கொண்டிருப்பதாகத் தெரிவித்த முஷாரப் தீவிரவாதிகளுக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று உறுதியாகக் கூறியுள்ளார். (ஓ)

## இந்திய சுதந்திரதினப் பாதுகாப்பு:

# அத்துமீறும் விமானங்களை சுட்டுத்தள்ள உத்தரவு!

புதுடில்லி,ஓக.15

இந்திய வான் எல்லைக்குள் அனுமதியின்றி பறக்கும் விமானங்களையும், எல்லை மீறி இந்தியப் பகுதிகளுக்குள் நுழையும் வான்ஊர்திகளையும் கண்டவுடன் சுட்டு வீழ்த்தும்படி இந்திய விமானப் படைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. தானியிங்கி விமானங்கள் மூலம் பாகிஸ்தான் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து இந்தத் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இன்று கொண்டாடப்படும் இந்தியாவின் 53வது சுதந்திரதினக் கொண்டாட்டங்களைச் சீர்குலைக்கப் போவதாக காஷ்மீர் தீவிரவாதிகள் மிரட்டியுள்ளதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லி இன்று 75 ஆயிரம் பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இந்தியாவில் முதல் முறையாக கண்காணிப்புப் பணிகளில் ஹெலிகொப்டர்களும் ஈடுபடுகின்றன. காஷ்மீரில் கொரியத் மாநாடு கட்சி இன்று வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளதை அடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ)

## கிறீன்லாந்து அருகே...

# ஆழ்கடலில் புதைந்துள்ள அமெரிக்க அணுகுண்டு!




## 30 வருடங்களாக உறங்கும் அபாயம்

கொப்பன்ஹேகன்,ஓகஸ்ட்.15

**அமெரிக்க அணுகுண்டு ஒன்று வெடிக்காத நிலையில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக கிறீன்லாந்து கடற்கரையை அண்மித்த ஆர்ட்டிக் வட்டத்தில் கடலின் அடியில் புதைந்துள்ளதாக டென்மார்க் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இதனை அடுத்து ஆழ்கடலில் புதைந்துள்ள அணுகுண்டு குறித்த அபாயம் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.**

1968ஆம் ஆண்டு கிரீன்லாந்தில் தமது கட்டுப்பாட்டில் இருந்த 'பூல்' விமானத்தளத்தில் இருந்து 4 அணு குண்டுகளுடன் கிளம்பிய அமெரிக்க விமானப்படை விமானம் ஒன்று ஆர்ட்டிக் வட்டத்தில் (வரைபடத்தை பார்க்க) விபத்துக்குள்ளாகி கடலில் வீழ்ந்தது. உடனடியாக தேடுதல் பணிகளை மேற்கொண்ட அமெரிக்கக் கடற்படையினர் விமானச்சிதைவுகளையும், அணுகுண்டுகளையும் மீட்டு எடுத்ததாக அப்போது தெரிவித்திருந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து சமீபத்தில் ஆய்வு நடத்திய டென்மார்க் பத்திரிகை ஒன்று அமெரிக்க குண்டு வீச்சு விமானத்தில் இருந்த 4 அணு குண்டுகளில் மூன்று மட்டுமே மீட்கப்பட்டதாகவும், கண்டுபிடிக்க முடியாததால் நாலாவது அணுகுண்டு மீட்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

அணுகுண்டு மீட்கப்படாதது குறித்து அமெரிக்கா, டென்மார்க்கிற்கு எந்த அறிவுறுத்தலையும் தரவில்லை என்று அந்தப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

'பூல்' விமான நிலையத்தின் முன்னாள் பணியாளர்களிடம் இருந்து பெறப்பட்ட இரகசிய ஆவணங்களைக்கொண்டும் -

சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளிலிருந்தும் -

ஆழ்கடலில் புதைந்துள்ள இந்த அபாயம் குறித்து தெரிய வந்ததாகப் பத்திரிகை நிறுவனம் கூறியுள்ளது.

டென்மார்க் ஆட்சியில் உள்ள கிரீன்லாந்தின் பூல் விமான நிலையத்தை தமது எதிர்ப்பு ஏவுகணைத் திட்டத்திற்கு உபயோகிப்பது குறித்து ஆலோசனை நடத்த அமெரிக்க அதிகாரிகள் குழு அடுத்த வாரம் கிரீன்லாந்துக்கு வரவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

# சிம்பாப்வேயில் பள்ளிச் சிறுமிகள் மீது கறுப்பர்கள் பாலியல் பலாத்காரம்!

## பொலீஸில் முறையிட்டும் பயனில்லையாம்

ஹராரே,ஓக.15

சிம்பாப்வேயின் தலைநகர் ஹராரேயில் உள்ள 'பிளக்போர்ட்பை' ஆரம்பப் பாடசாலையில் படித்து வந்த 12-13 வயதுக்குட்பட்ட பத்துக்கும் மேற்பட்ட வெள்ளையர் இன பள்ளிச் சிறுமிகளை, முன்னாள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்று தம்மைக் கூறிக் கொள்ளும் கறுப்பினத்தவர் கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம் புரிந்ததாகவும் -

உலக அரங்கில்

இது குறித்து பொலீஸில் முறைப்பாடு செய்தும் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் -

கூறப்படுகிறது.

அதே பாடசாலையைச் சேர்ந்த இரு ஆசிரியர்களும் முன்னாள் சுதந்திரப் போராட்ட வீரர்களால் கொடூரமாகத் துன்புறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிம்பாவேயில் இன்னமும் வெள்ளையர் மீதான தாக்குதல்கள் தொடர்வதாக விவசாயிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தெற்கு ஆபிரிக்க நாடுகளின் உச்சி மாநாட்டில் சிம்பாப்வே அரசின் காணி சுவீகரிப்பு மற்றும் விநியோகக் கொள்கைக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிம்பாப்வேயில் அதிபர் றொபேர்ட் முகாபேயின் அரசு வெள்ளையரின் பண்ணை நிலங்களைப் பறித்து கறுப்பின மக்களுக்கு விநியோகிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியதும் -

சிம்பாப்வேயின் சுதந்திரப் போரில் பங்கு பற்றிய முன்னாள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் கறுப்பினத்தவர் அடங்கிய குழுக்கள் வெள்ளையர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களது விவசாய நிலங்களை பலாத்காரமாக ஆக்கிரமித்து வருவதும் தெரிந்தவையே. (ஓ)

# பயங்கரவாத நாடுகள் பட்டியலில் பாகிஸ்தானை சேர்க்க வேண்டும்

## அமெரிக்காவிடம் இந்தியா வலியுறுத்தல்

புதுடில்லி,ஓக.15

பாகிஸ்தானைப் பயங்கரவாத நாடாக அறிவிக்கும்படி அமெரிக்காவை இந்தியா கேட்டுள்ளதாக இந்திய வெளியுறவு இணை அமைச்சர் அஜீத்குமார் பாஞ்சா தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றிய போது தெரிவித்தார்.

அமெரிக்கச சட்டங்களுக்கு உட்பட்டு பயங்கரவாத நாடாகப் பாகிஸ்தானை அறிவிக்கத் தேவையான ஆதாரங்களை அமெரிக்காவுக்கு இந்தியா அனுப்பிவைத்துள்ளதாகவும் -

இந்தியாவின் கோரிக்கையை அமெரிக்காவிடம் வலியுறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் -

இணை அமைச்சர் மேலும் கூறினார். (ஓ)



மனைவி வீரமதாவுடன் மகேந்திர சௌத்திரி.

# பிஜியில் ஜனநாயகத்தை மீட்க ஐ.நா.உதவியைக் கோருவேன்!

## மகேந்திர சௌத்திரி கூறுகிறார்

சுவா,ஓக.15

பிஜியில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அரசை அமைக்க ஐ.நாவின் உதவியை நாடப் போவதாக பதவி நீக்கப்பட்ட பிரதமர் மகேந்திர சௌத்திரி பத்திரிகைப் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

பிஜிக்கு ஐ.நா.படையை அனுப்பும் வாய்ப்புக்கள் குறித்து ஐ.நா.வுடன் ஆலோசனை நடத்த உள்ளதாக கூறிய அவர் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து பிஜியில் மீண்டும் ஜனநாயகத்தை மீட்க உதவி கோரப்போவதாகவும் தெரிவித்தார்.

பிஜியில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரான மகேந்திர சௌத்திரி பிரதமர் பதவியில் இருந்து கிளர்ச்சியாளர்களால் விலக்கப்பட்டு நாடாளுமன்றக் கட்டடத்தில் நீண்ட நாள்கள் தடுத்துவைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டது தெரிந்ததே. (ஓ)

### பதவிநீக்கம்

நேபாள நீர்பாசனத்துறை அமைச்சர் கும் பகதூர்காட்கே பதவி விலக்கப்பட்டுள்ளார். பிரதமர் ஜி.பி.கொய்ராலா மேற்கொண்ட இந்த நடவடிக்கையால் நேபாள காங்கிரஸில் நீண்ட நாள்களாக நிலவி வந்த நெருக்கடி சிறிது தணியும் என்று நம்பப்படுகிறது.

பிரதமரைக் கடுமையாக எதிர்த்து வரும் நேபாள காங்கிரஸின் மூத்த தலைவர் கே.பி.பதாராவின் நெருங்கிய ஆதரவாளர் காட்கே என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

# மிதிவெடி நாடுகளின் பட்டியலில் இலங்கை நான்காவது இடத்தில்!

மிதிவெடிகள் அதிகளவில் புதைக்கப்பட்டுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை நான்காவது இடத்தில் உள்ளது.

சர்வதேச அமைப்பு ஒன்று வெளியிட்ட ஆய்வறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் குறைந்த பரப்பளவில் அதிக எண்ணிக்கையிலான மிதிவெடிகள் புதைக்கப்படும் நாடாக இலங்கை உள்ளதாகவும், வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மட்டுமே மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதகாலப் பகுதிக்குள் கிளிநொச்சியில் 60சதுரகிலோமீற்றர் பரப்பளவில் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளில் சிக்கி 32பேர் கால்களை இழந்திருப்பதும் -

இலங்கையில் பிரயோகத்தில் உள்ள மிதிவெடிகள் சுமார் 50 ஆண்டுகள் வெடிக்கும் நிலையில் இருக்கும் தன்மை வாய்ந்தவை என்பதும் குறிப்பிடத்தக்கவை. (ஓ)

# அமைதிக்கு பங்கம் விளைவித்தால் அரபுக்கள் மீது கடும் நடவடிக்கை!

## பாக். அமைச்சர் எச்சரிக்கை

பாகிஸ்தானில் குடியேறியுள்ள அரபுத்தீவிரவாதிகள் நாட்டின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர் அப்துல்சதார் எச்சரித்துள்ளார்.

கட்டாருக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் அங்கு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

பாகிஸ்தானில் தீவிரவாதிகள் என்று கருதப்படும் சுமார் 25 ஆயிரம் அரபுக்கள் வசித்து வருவதாகவும்-

இவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல்களை அரபுநாடுகள் பாகிஸ்தானுக்குத் தந்துள்ளதாகவும் தெரிவித்துள்ள சதார், இவர்கள் மீது தீவிர கண்காணிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

1979-89 ஆம் ஆண்டுகளில் ஆப்கானிஸ்தானில் சோவியத் ரஷ்யாவுக்கு எதிராகப் புனிதப் போர் நடத்த அரபு நாடுகளில் இருந்து வந்த இஸ்லாமிய இளைஞர்கள் பலர் ஆப்கானிஸ்தானில் இருந்து ரஷ்யப் படைகள் வெளியேறிய பின்னர் தாய்நாடுகளுக்குச் செல்லாமல் பாகிஸ்தானில் குடியேறியுள்ளனர்.

தற்போது பாகிஸ்தானில் இடம்பெறும் இஸ்லாமியப் பிரிவுகளிடையேயான மோதல்கள், மற்றும் வெடிகுண்டுத் தாக்குதல்களில் இந்த அரபுக்களுக்கு அதிகம் பங்கு இருப்பதாகக் கருதப்படுகிறது. (ஓ)

# சமுர்த்தி நியமனத்துக்கான நேர்முகப்பரீட்சை

# நாளை முதல் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக

யாழ்ப்பாணம், ஓக. 15

குடாநாட்டில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகச் சமுர்த்தி நியமனங்களை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகள் நாளை புதன் கிழமை காலை 9 மணி முதல் பிரதேச செயலக அலுவலகங்களில் இடம்பெறவுள்ளன.

நல்லூர், சண்டிலிப்பாய், கோப்பாய், யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, சங்கானை, உடுவில் ஆகிய பிரதேச செயலர் அலுவலகங்களில் அந்த அந்தப் பிரிவுக்கான நேர்முகப் பரீட்சைகள் இடம்பெறும்.

நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு வேலணை உதவி அரச அதிபர் அலுவலகத்திலும் —

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களுக்குப் பருத்தித்துறை உதவி அரச அதிபர் அலுவலகத்திலும் —

சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களுக்குக் கரவெட்டி உதவி அரச அதிபர் பணிமனையிலும்— நேர்முகப் பரீட்சைகள் இடம்பெறும்.

ஆள் அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிட அத்தாட்சிப் பத்திரம், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் ஆகியவற்றை நேர்முகப் பரீட்சைக்கு வரும் போது எடுத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் ரீதியாக அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

### உடுவில்

சமுர்த்தி ஊக்குவிப்பாளர்— தெய்வேந்திரம் நிதர்சன் — உடுவில் மத்தி, இரத்தினசிங்கம் லலிதாவதி — உடுவில் வடக்கு, கையிலநாதன் பரமேஸ்வரன் — இணுவில் வட கிழக்கு, சிவசோதி நடராசா — இணுவில் மேற்கு, நாகையா செந்தூரச்செல்வன் — தாவடி தெற்கு, திருமேனி கேசவன் — சூராவத்தை, சுன்னாகம், நடராசா ஜெனாளன் — ஏழாலை தென் மேற்கு, கனகரட்ணம் விஜயலதா — ஏழாலை தெறகு, சுத்தானந்தம் சுதர்சினி — குப்பிளான் வடக்கு.

சமுர்த்தி வங்கியாளர் — சிவலோகநாதன் பவதாரணி — முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னாகம், சந்திரபோஸ் ரமேஸ் — ஏழாலை மத்தி, ஏழாலை. இராசசிங்கம் கஜேந்திரன் — உதயசூரியன் வீதி, உடுவில்.

சமுர்த்தி யூனியன் — கந்தசாமி கிறோஜினி — சங்குவேலி தெற்கு, சண்முகலிங்கம் சசிகலா — ஏழாலை மத்தி ஏழாலை, நாகேந்திரம் சுரேஸ்குமார் — சுன்னாகம் மத்தி, கந்தப்பிள்ளை சசிதரன் — சுன்னாகம் தெற்கு, யோகராசா குமாரபாமா — உடுவில் தென் மேற்கு, தில்லைநாயகம் சுபாதினி — சுன்னாகம் மேற்கு.

### நல்லூர்

சமுர்த்தி ஊக்குவிப்பாளர்— இரத்தினசிங்கம் ரகுராஜன் —கோண்டாவில் கிழக்கு, தம்பிராசா சசிகலா— 161, ஏ. வி வீதி. அரியாலை, தியாகலிங்கம் வசந்தி - 200/2, கண்டி வீதி, அரியாலை. இராசையா றஜனிகாந்— 7 ஸ்ரான்லி கல்லூரி வீதி நலலூர், குமுந்தினி கிட்னேஸ்வரன — 32, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை, தனபாலசிங்கம் சுஜேந்தஜரன்— 41/1, புகையிரத நிலைய வீதி, கந்தர்மடம், சிவானந்தன் சிவகுமாரன்— 175/8, கைலாயப்பிள்ளையார்கோயில்வீதி நல்லூர், பாலச்சந்திரன் சஞ்சீவ் — 393/33, கோயில்வீதி நல்லூர், பாலசுப்பிரமணியம் சுமதி — இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, கிருஸ்ண பிள்ளை ஞானவதனி— கலாசாலை வீதி, திருநெல்வேலி, நாகராசா அகிலன்— மஞ்சத்தடி இணுவில், செல்வராசா ஐசோதா— கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு, மாசிலாமணி குலசேகரம்— அச்சுக்கூட ஒழுங்கை கொக்குவில் கிழக்கு, பாலசிங்கம் பாலநாகம்மா— கேணியடி ஒழுங்கை கொக்குவில் மேற்கு, கணவதிப்பிள்ளை பிறைசூடி — ஆணைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு.

சமுர்த்தி வங்கியாளர் — சிவபாதசேகரம் மணிகரன்— 115, ஸ்ரேசன் றோட், கொக்குவில் கிழக்கு, ஜீவனா செல்வரத்தினம் — பழங்கிணற்று பிள்ளையார் கோயிலடி கலாசாலை வீதி, திருநெல்வேலி, சுதர்சினி சீனிவாசகம் — பொன்னையா லேன், கொக்குவில் மேற்கு, சாமினி முருகையா— குளம்கரை லேன், கொக்குவில் கிழக்கு.

சமுர்த்தி யூனியன்— கணேசலிங்கம் சதீஸ் — 69, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை, இராமையா பிறேமபாலா — ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில் கிழக்கு, கவிதா தங்கராசா — தேங்காய் மூலை, கொக்குவில் மேற்கு, கணவதிப்பிள்ளை டோறா பார்த்தீபன் — 21, புவனேஸ்வரி அம்மாள்வீதி, நல்லூர்கிழக்கு, செந்திராசா விஸ்ணுகாந்தன் — சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, நல்லையா ஜெயரஞ்சன் — 35, கொண்டலடி வீதி, நல்லூர்.

### மருதங்கேணி

சமுர்த்திஊக்குவிப்பாளர்— நிக்கிலஸ் மரிய தேவதாஸ் — மணற்காடு. குடத்தனை, செல்லத்துரை அரியநாயகம் —குடத்தனை மேற்கு, நடராசா கலாமதி— குடத்தனை வடக்கு, ஞானசீலன் ஞானமலர் — பொற்பதி, குடத்தனை, இராஜரட்ணம்செந்தூரன்—அம்பன், குடத்தனை, சோமசுந்தரம் ஜெயந்தினி— நாகர்கோயில் கிழக்கு, சிவப்பிரகாசம் சிவாயநம — நாகர்கோயில் மேற்கு, கார்த்திகேசு யோதிலிங்கம்—நாகர்கோயில் தெற்கு, அன்ரனி வின்சன் வின்சன் ஜெறின்—செம்பியன் பற்று வடக்கு, பொன்னுத்துரை முல்லைநாகேஸ்வரி— செம்பியன்பற்று தெற்கு, தங்கராசா மரியடிலோஜினி— மருதங்கேணி, தாளையடி, வன்னியசிங்கம் உதயகுணசிங்கம் — வத்தராஜன் தெற்கு, தாளையடி, ஜெயவீரசிங்கம் மேனகா — உடுத்துறை தெற்கு, தாளையடி, காசிப்பிள்ளை பேபிறஞ்சனா— ஆழியவளை, தாளையடி, பாமதி பொன்னுச்சாமி— ஊரிக்காடு, வெற்றிலைக்கேணி, மரிசிலின் ஜொணாபாக்ஜொய்சி — கட்டைக்காடு, முள்ளியான், வேலுப்பிள்ளை சிவலிங்கராசா—வெற்றிலைக்கேணி, முள்ளியான், நாகலிங்கம் சியாமளா—வெற்றிலைக்கேணி, முள்ளியான்.

சமுர்த்தி வங்கியாளர் — பத்மநாதன் சர்மிளா — அம்பன், குடத்தனை, முருகேசு யசோதா — நாகர்கோயில் மேற்கு.

சமுர்த்தி யூனியன் — தர்மகுலசிங்கம் சியாமளா—நாகர் கோயில் தெற்கு, பொன்னுத்துரை தேவகி—நாகர்கோயில் மேற்கு, யோன் அல்பிறட் மேரிறோஞ்சலா—செம்பியன் பற்று வடக்கு, ஸ்ரீரங்கநாதன் சசிகலா — வத்தராயன் தெற்கு, தாளையடி, முருகேசு விஜயவதனி—அம்பன், குடத்தனை, செல்வநாயகம் மங்கையர்க்கரசி — உடுத்துறை தெற்கு, தாளையடி.

### சண்டிலிப்பாய்

சமுர்த்தி ஊக்குவிப்பாளர் மேரி ஸ்ரெலா பீற்றர்— நவாலி கிழக்கு, தம்பிரட்ணம் சுபாசினி— சண்டிலிப்பாய், வடக்கு, யோகராஜா கோமலாதேவி-ஐயனார்வீதி, சண்டிலிப்பாய், யோகேஸ்வரன் யோக தர்சினி—மாகியப்பிட்டி, தியாகராசா பாலமுரளி — வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, வில்சன் வியந்தன்—சில்லாலைவடக்கு, பண்டத்தரிப்பு, சுப்பிரமணியம் கோமதி-மாதகல்கிழக்கு, அரியரத்தினம் சவரிமுத்து— பிரதான வீதி, முத்துக்கடை, மாதகல், டெய்சியெய்சி அருளானந்தம்—தபாற்கந்தோர் வீதி, இளவாலை, லோகநாதன் ஞானவேல்—32, அடிகார் செல்வமுத்து வீதி. மானிப்பாய்.

சமுர்த்தி வங்கியாளர்— திருவாகினி திருநாவுக்கரசு— ஆனந்தா வீதி, வட கிழக்கு, மானிப்பாய், யோசேப்பு ஸ்ரீபன் நிக்சன்—நல்லாயன் வீதி, இளவாலை, கந்தையா ஆனந்தவேல்— முருகமூர்த்தி கோயில் வீதி, சுதுமலை தெற்கு.

சமுர்த்தி யூனியன்— நாகமுகத்து யாழினி— காளி கோயிலடி, சண்டிலிப்பாய், மத்தி சண்டிலிப்பாய், பத்மநாதன் கங்காதேவி— காஞ்சிபுரம், மாதகல், ஜெயரட்ணம் ரஜீவன்— கிறவுண் வில்லா நவாலி தெற்கு மானிப்பாய், தர்மகுலசிங்கம் றஜித்தா— கனகசபை வீதி, மானிப்பாய். குலசேகரம்சுகந்தினி —நவாலி வடக்கு, மானிப்பாய். லோகநாதன் கெங்காதரன் — உடுவில், மேற்கு சுன்னாகம்.

### சாவகச்சேரி

சமுர்த்தி ஊக்குவிப்பாளர் லோகநாயகம் கருணாவதி— கைதடி வடக்கு, தர்மலிங்கம் நகுலேஸ்வரன்— கைதடி தென்மேற்கு, கந்தையா ஜீவகௌரி— கைதடி நாவற்குழி, திருஞானசம்பந்தர் பகிரதன் —தனங்களப்பு, சரவணமுத்து ஜெகதா — சங்கத்தானை, பிஜசேன சந்திரசேகர்—கந்தையா வீதி, சாவகச்சேரி, மகாலிங்கம் பிரேமினி — நுணாவில் மேற்கு, வரதராஜா தர்சனா—நுணாவில் மேற்கு, குணசேகரம் குமுதினி—கைதடி நுணாவில், காசிப்பிள்ளை சாந்தினிதேவி —தச்சன்தோப்பு, கைதடி, ஐயாத்துரை ஜெகதாம்பிகை —மந்துவில் வடக்கு, கணபதிப்பிள்ளை பவளராணி — மட்டுவில் வடக்கு. கிட்ணன் சிவமஞ்சுளா — வரணி வடக்கு, சண்முகநாதன் தீபா —மீசாலை வடக்கு, வீரகத்தி கனகேஸ்வரி — பாலாவி. கொடிகாமம், தம்பு தயாளினி —பெரிய நாவலடி, கொடிகாமம், சிவராசா சிவரூபன் —கச்சாய் தெற்கு, கொடிகாமம், அப்புக்குட்டிகோகிலாதேவி — எழுதுமட்டுவாள் தெற்கு, சுப்பிரமணியம் கருணாகரன்—கரம்பைக்குறிச்சி, வரணி, அம்பலவாணர் மஞ்சுளாதேவி — இடைக்குறிச்சி, வரணி, கந்தையா பரமானந்தம்— வரணி, இயற்றாலை, யோகராசாஉதயணன்—மந்துவில்கிழக்கு, திசையாகயோகம் விஜிதா—மந்துவில் கிழக்கு.

சமுர்த்தி வங்கியாளர்— S. மச்சேந்திரகுமாரி — சங்கத்தானை, இரவீந்திரநாதன் ஜெகன்—கைதடி மத்தி, கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரி கதிர்காமநாதன் ஜெயகௌரி —ஆஸ்பத்திரி வீதி, கொடிகாமம், சின்னத்தம்பி பிரதீபன்—நுணாவில், மருதலிங்கம் பிரேமலா—கச்சாய் வீதி, சாவகச்சேரி, நல்லநாதன் நளினி—படித்த மகளிர் திட்டம், வரணி, சண்முகராசா செந்தூரன்—குடம்பியன், வரணி.

சமுர்த்தி யூனியன் — அந்தோனிப்பிள்ளைபிறெஞ்சியா —உசன், மிருசுவில், பரமலிங்கம் பாமினி—மறவன்புலோ, சாவகச்சேரி, தர்மலிங்கம் இந்திரகலா — பாலாவி தெற்கு, மீசாலை, இராஜமணி இராஜினி — மீசாலை கிழக்கு, மீசாலை, இராமநாதன் யோகேஸ்வரி— மந்துவில் வடக்கு, கொடிகாமம், தேவராசா வாசுகி—மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.

### யாழ்ப்பாணம்

சமுர்த்தி ஊக்குவிப்பாளர் — வரதராசா கலாதேவி — 197, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம், செபஸ்ரியாம்பிள்ளை கோமதி — 215/9, ராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம், தவராசா கருணாகரன் — 2/3, கற்குழ லேன். கொட்டடி., சிவபாதம் டெய்சிராணி — 377/5, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம், பூவிலிங்கம் வனிதா— 85, சப்பல் வீதி, யாழ்ப்பாணம், அந்தோனிப்பிள்ளை அன்ரன் நீதீஸ் — 45, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம், செபமரியமுத்து சக்திசேகரன் — 2, புதிய பூங்கா வீதி, யாழ்ப்பாணம், பேரின்பநாயகம்சிவபாதம்— 327/9, கதிற்றல் லேன், யாழ்ப்பாணம், செல்லத்தம்பி ஜெகநாதன் — 56/5, கோயில் ஒழுங்கை, நாவாந்துறை, சீவரத்தினம் வேணுகாதேவி — கன்னாபுரம் கொட்டடி,

சமுர்த்தி வங்கியாளர் — கந்தசாமி செந்தில்குமரன் — உபதபாலகம். கொழும்புத்துறை, யேசுதாசன் நவஜோதி — 26,4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம், கோபாலரத்தினம் சித்திரக்குமார் — 49, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம்.

சமுர்த்தி யூனியன் — அருள்ானந்தம் ஜெயகாந் —62/2 சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம், ஜெகநாதன் சசிகலா — 2, பேக்கரி லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், இராமச்சந்திரன் யாதவன் — 145, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம், ஜோர்ச் ரட்ணகுமார் ரபியல் ராஜ்குமார் — 28, வேம்படி வீதி, யாழ்ப்பாணம், அருள்ராஜா சிறீஜெகன் — 136, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், சண்முகப்பிரியா சண்முகரத்தினம் — 202, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்,

### தெல்லிப்பழை

சமுர்த்திஊக்குவிப்பாளர்— கிட்டிணன் சிவாஜினி—காளி கோயிலடி, மலலாகம், கந்தையா ஜெயறூபி — தம்பாலை, அளவெட்டி, முருகதன் தங்கவடிவேல் — தெல்லிப்பழை கிழக்கு, நவரத்தினம் சிறீஸ்வரன் — குரும்பசிட்டி. தெல்லிப்பழை, சதாசிவம் குகதாசன்—டச்சு வீதி, உடுவில், இராசரத்தினம் அருமைக்குமாரி—சின்னதாசன், இராச வீதித் தோப்பு அச்சுவேலி.

சமுர்த்தி வங்கியாளர்—சுந்தரலிங்கம் சுகன்யா — 133, ஸ்ரான்லி வீதி, அத்தியடி, வேலாயுதம் சுதாமதி—குரும்பசிட்டி, கொல்லங்கலட்டி, பொன்னுத்தம்பி வனிதா— கணேஸ்வரம், அளவெட்டி கிழக்கு. கனகசபாபதிப்பிள்ளை மங்களேஸ்வரி— கேளருக்கரை, அளவெட்டி. கிழக்கு, செல்வராஜா சிறீகரன் — நெசவுசாலை வீதி. மாவிட்டபுரம்.

சமுர்த்தி யூனியன் — கனகரத்தினம் சபேசன் — விழிசிட்டி, தெல்லிப்பழை. செல்லத்துரைஈஸ்வரன் கல்வளை, இளவாலை. தனையசிங்கம் திபிசாந்தி — அம்பலவாணர் வீதி, கட்டுவன். ஐயாத்துரை கஜமுகி - புளியத்தோட்டம். மல்லாகம். நடராசா சுபேந்தினி — பருத்தித்துறை வீதி. காங்கேசன்துறை. கதிரவேலு பாலாறூபி — தெல்லிப்பழை கிழக்கு.

### சங்கானை

சமுர்த்திஊக்குவிப்பாளர்— வேதவாகனம்பிள்ளை ஜெயந்தினி — வடக்கம்பரை, சுழிபுரம், பொன்னுத்துரை உதயமலர் — அராலி கிழக்கு, அராலி, விஜிதா சிவராஜா — காளுவன், சுழிபுரம், அருளம்பலம் சிவானந்தன் — சுழிபுரம் மேற்கு, சுழிபுரம், இராசதுரை சத்தியமதி — நிற்சாமம், சங்கானை, தனபாலசிங்கம் ரஞ்சன் — காலையடி. பண்டத்தரிப்பு.

சமுர்த்தி வங்கியாளர் — இராயநாயகம் சிறீகரன் — அராலி தெற்கு. வட்டுக்கோட்டை, வேலாயுதம்பிள்ளை பரந்தாமன் — காரைநகர் வீதி, சித்தன் கேணி, தம்பியய்யா வித்தியாதரன் — அராலி வீதி, சங்கானை.

சமுர்த்தி யூனியன்— வரதராஜன் ராஜ்குமார் — வட்டு வடக்கு, சித்தன்கேணி, விவேகானந்தராஜா கேமலா — சங்கரத்தை, வட்டுக்கோட்டை, விநாயகமூர்த்தி சங்கரசிவம் — வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை, முத்துக்குமாரசாமி கௌதமி — வடக்கம்பரை, சுழிபுரம், ஆறுமுகம் கிருஷ்ணபவானி— பொன்னாலை மேற்கு, மகேந்திரா மயூரதி — சிலம்புப்புளியடி, சங்கானை.

### கோப்பாய்

சமுர்த்திஊக்குவிப்பாளர்— பிள்ளையன் கஜேந்திரன் — சிறுப்பிட்டி மேற்கு, சிறுப்பிட்டி, இரத்தினசிங்கம் சசிகரன் — உரும்பிராய் தெற்கு, இராசநாயகம் இராசு — உரும்பிராய் கிழக்கு, முருகையா கேதீஸ்வரி — ஊரெழு கிழக்கு, சுன்னாகம், கிருஷ்ணகுமார் கிருசா — நீர்வேலி வடக்கு, நீர்வேலி, கந்தசாமி வதனறூபி — புத்தூர் மேற்கு, கந்தசாமி ஜெகந்தன் — அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி.

சமுர்த்தி வங்கியாளர் — தம்பித்துரை ஜெயசீலன் — விளையாட்டரங்கு வீதி, கோப்பாய் தெற்கு, தர்மலிங்கம் கோகிலானந்தன் — கோப்பாய் வடக்கு, இராமலிங்கம் சபாகரன் — சிவன் வீதி, உரும்பிராய், முத்துக்குமாரசாமி கயூகரன்— செல்லத்துரை வீதி, உரும்பிராய் தெற்கு

சமுர்த்தி யூனியன் — குமரகுருபரநாதன் சிவகுமார் — கோப்பாய் வடக்கு, சிவாஜினி இராசலிங்கம் — யார்வத்தை, கோப்பாய் வடக்கு, நடராஜா மோகனேசன் — டச்சு வீதி, கோப்பாய், பொன்னம்பலம் றஜனி — புத்தூர் வடக்கு, புத்தூர், சிங்கராஜா ஜெயறூபன் — பழம் றோட். கோப்பாய் தெற்கு, மலர்வழி சாந்திராஜ் — அரசடி லேன், இருபாலை கிழக்கு.

### நெடுந்தீவு

சமுர்த்தி வங்கியாளர் — ஜோன் அகாய் - 8 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

சமுர்த்தி யூனியன் - பாக்கியநாதன் அன்ரன் அமலதாஸ் — 13 ஆம் வட்டாரம், சந்தியோகு ஜெயமரீனா — 10 வட்டாரம், குமாரசூரியர் இளங்குமரன் — 9 ஆம் வட்டாரம், நாகேந்திரம் போகலட்சுமி— 14 ஆம் வட்டாரம் கோபலாபிள்ளை சுந்தர பவானி — 5 ஆம் வட்டாரம்,

(9 ஆம் பக்கம் பார்க்க)

உதயன்

## மாறுவது எப்போது?

தமிழர்களுக்கு இந்த நாட்டில் எல்லா உரிமைகளும் உள்ளன. இதற்குமேல் அவர்களுக்கு என்ன வேண்டும்? அதிகாரப் பரவல் என்ற பெயரில் நாடு பிளவுபடுவதை அனுமதிக்க முடியாது -

அரசாங்கம் அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டத்தைக கொண்டு வர முயன்ற வேளையில், சிங்களத் தீவிரவாதப் போக்குடையவர்களும் அவர்களது அமைப்புகளும் முன் வைத்த வாதம் இது.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் இரண்டாம் தரப் பிரஜைகளாக, அடிமைநிலையிலேயே வாழ்கிறார்கள் என்பது இவர்களுக்குத் தெரியாதது அல்ல. ஆயினும் அவற்றை வேண்டுமென்றே - மறந்துபோய் - மூடிமறைத்து - தமிழர்களும் எல்லா உரிமைகளையும் அனுபவிக்கிறார்கள் என்ற தோற்றத்தை அவர்கள் காட்டி வருகிறார்கள்.

ஆனால் தமிழர்களோ அடையாள அட்டை பெறுவது தொடக்கம் ஓரிடத்தில் போய்த் தங்குவது வரை, நாளாந்த வாழ்க்கையில் படும் அவலங்களும் கஷ்டங்களும் அலைச்சல்களும் சொல்லில் அடங்கா. தங்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்குக் கூட பல தடைகளையும் இடைஞ்சல்களையும் இன்னல்களையும் அனுபவிக்க வேண்டியுள்ளது.

வெளிநாடு செல்வதற்கென்று கொழும்பு சென்ற தமிழ் இளைஞன் ஒருவன், ஐந்து வருடங்களுக்குப் பின்னரும் வெளிநாடு செல்லவும் முடியாமல், கொழும்பில் தங்கி நிற்கவும் இயலாமல் தமது சொந்த ஊருக்குத் திரும்பி வரவும் வழியின்றி அவதிப்படும் விவரத்தை நேற்று எமது பத்திரிகையில் வாசித்திருப்பீர்கள்.

தக்க காரணம் இன்றிக் கொழும்பில் கைது செய்யப்பட்டு ஐந்து வருடங்களாகத தடுப்புக்காவலில வைக்கப்பட்டிருந்த அந்த இளைஞன் குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப்பட்ட பின்னர் தம்மை அடையாளம் காட்டவும் முடியாத நிலையில் தவிக்கிறார்!

தமிழர்களைச் சந்தேகப் பிராணிகள் ஆக்கும் வகையில் பல சட்டங்கள் இந்த நாட்டில் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் விதிகள் பலவும் மனித உரிமைகளைச் சிறிதும பொருட்படுத்துவதாக இல்லை. நாட்டின் பாதுகாப்பு என்ற போர்வையால் அவை போர்த்தப்பட்டுள்ளன. சட்டங்கள் ஒரு மடங்காயின் அதிகாரிகள ஒன்பது மடங்கு கொடுரமாக நடைமுறைப்படுத்துகிறார்கள்.

அதன் விளைவு, நீதி கேட்க எவருமில்லாமல், நிவாரணம் பெற வழி எதுவுமின்றித் தமிழ் மக்கள் பல திசைகளாலும் இன்னல்களை அனுபவிக்கிறார்கள். போரின் அனர்த்தங்களும் அவலங்களும் ஒரு புறம் வருத்த, அரசினதும் அதிகாரிகளினதும் "இம்சை"களால் ஒரு நாட்டின் குடிமக்கள் அனுபவிக்காத பல்வேறு வகையான அவஸ்தைகளுக்கு ஆளாகுகிறார்கள்; அலங்கோல வாழ்க்கைக்குத் தள்ளப்படுகிறார்கள், தமிழ் மக்கள்.

இவற்றை வெளிப்படுத்தித் தமிழ் மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ்வதற்கு உதவக் கூடிய சக்தி இப்போது எவரிடமும் இல்லை. வெறும் போலித்தனமான வாக்குறுதிகளும் மக்கள் மீது "கூட்டி அடிக்கும்" செயற்பாடுகளும் தமிழ் மக்களை அடிமை நிலைக்கே தள்ளுகின்றன. இத்தகைய பின்னணியில் அவர்களது வாழ்க்கை எத்தனை காலத்துக்கு இவ்வாறு ஓடப்போகிறது?

அரசமைப்புச் சீர்திருத்தச் சட்ட நகலை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்த பௌத்த மதகுருவான கெடிகல்ல விமலசேகர தேரர், தமக்கு ஆதரவு தெரிவித்துக் கூடி நின்றவர்களிடம், "நாடு பிளவுபட்ட பின்னர் அதில் வாழ நான் விரும்பவில்லை. அவ்வாறு நிகழ்வதற்கு முன்னர் இறந்து விடுவது மேல்" என்று கூறியிருந்தார்.

தமிழ் மக்கள் படும் இன்னல்களையும் அவலங்களையும் மொத்தமாகக் கூட்டிப்பார்த்தால் "இந்த நாட்டில் வாழ்வதை விட அதனை முடித்துக் கொள்வது மேல்" என்றே அவர்கள் சொல்வர்!

இந்த நிலை எத்தனை காலத்துக்குத் தொடரப்போகிறது? அது மாறுவது எப்போது?

## ஆலையில் தீ விபத்து

வலி.கிழக்கு,ஓக.15

ஆலை ஒன்றில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தினால அதன் கூரைகள் எரிந்து நாசமாகியது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கல்வியங்காடு சந்தைப்பகுதயில் இடம்பெற்றது.

கல்வியங்காடு செங்குந்த இந்துக்கல்லூரி வீதியில் அமைந்துள்ள தேங்காய் எண்ணெய் ஆலை ஒன்றிலேயே இந்தத் தீ விபத்து இடம் பெற்றது.

ஆலை இயங்கிக் கொண்டிருந்த வேளை திடீரென ஆலையின் எஞ்சின் புகைபோக்கியின் மூலம் தீப்பொறிகள் வெளியேறியதால் ஆலையின் கூரை தீப்பற்றி எரிந்தது. அருகில் உள்ளோரின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டது. (ஐ-180)

# படையினரின் உறவினர்கள் வன்னி செல்வது சாத்தியமா?

## பாதுகாப்பு அமைச்சு இவ்வாரம் முடிவு

கொழும்பு,ஓக.15

புலிகள் இயக்கத்தினரின் தடுப்புக் காவலில் இருக்கும் படையினர் மற்றும் சிவிலியன்களைப் பார்வையிடுவதற்கு அவர்களது உறவினர்கள் அரசாங்கத்தின் அனுமதியோடு இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்துக்குச் செல்ல முடியுமா என்பது குறித்த தீர்க்கமான முடிவை பாதுகாப்பு அமைச்சு இவ்வாரம் வெளியிடவுள்ளது.

அரசு சார்பு லேக்ஹவுஸ் பத்திரிகை ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் வடக்கு - கிழக்கு யுத்தத்தின் போது காணாமல் போயுள்ள படையினரது உறவினர்கள் சங்கத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

மேற்படி சங்கத்தினரின கோரிக்கை தொடர்பாகப் பரிசீலனை செய்து அவர்களுக்கு முடிவொன்றை அறிவிக்கும்படி ஜனாதிபதி செயலகம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளது. தங்களது கோரிக்கை தொடர்பாக இவ்வாரம்தீர்க்கமான முடிவொன்றை அறிவிப்பதாகப் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், சங்கத்தின் தலைவர் ஈ.பி. நாணயக்காரவுடன் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளார். (ஐ-6)

# புதிய அரசமைப்பை ஆதரித்தோருக்கு எதிராகப் பிரசாரம் செய்யத் திட்டம்!

## சிங்கள அமைப்புகள் அணிதிரள்கின்றன

கொழும்பு,ஓக.15

பௌத்த மதகுருமாரின் வேண்டுகோளைப் புறக்கணித்துப் புதிய அரசமைப்புக்கு நாடாளுமன்றத்திலும், வெளியிலும் ஆதரவு வழங்கிய அரசியல்வாதிகளை 'தேசத்துரோகி' என அடையாளம்காட்டி அவர்களை எதிர்வரும் பொதுத்தேர்தலில் படுதோல்வி அடையச் செய்வதற்கு சிங்கள அமைப்புகளும், பௌத்த அமைப்புகளும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

புதிய அரசமைப்பை ஆதரித்த அரசியல்வாதிகளின் பெயர்களை மேற்கண்ட அமைப்புகள் இப்போது திரட்டி வருவதாகத் தெரியவருகின்றது.

இந்த அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிட முன்வந்தால் அவர்களைத் தோற்கடிப்பதற்குச் சிங்கள அமைப்புகள் பௌத்த பிக்குகளினதும், மதத்தலைவர்களினதும் தலைமையில் கோஷ்டி கோஷ்டியாகச் சென்று அவர்களுக்கு எதிராக பிரசாரங்களை நடத்துவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

அரசாங்கம் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் இந்த அரசமைப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ள முற்பட்டால் அதற்கு சிங்கள அமைப்புகள் ஒரு போதும் இடமளிக்காது என்று சிங்கள அமைப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-6)

# 'தேயிலையில் நஞ்சு' என்று வதந்தி பரப்பியவர் கைது!

கொழும்பு,ஓக.15

இலங்கைத் தேயிலையில் நஞ்சு கலக்கப்பட்டிருப்பதாக 1994 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பெரும் வதந்தி பரப்பப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் - 'எல்லாளன் படை' என்னும் அமைப்பைச் சேர்ந்த - செல்வகுமார் என்ற இளஞரைக் கைது செய்துள்ளதாக கல்கிசை பயங்கரவாத ஒழிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணம் தெரிவித்துள்ளார்.

எல்லாளன் படையின் உளவுப் பிரிவைச் சேர்ந்த செல்வகுமாரே இவ்வதந்தியைப பரப்புவதற்கு திட்டமிட்டவர் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

வெளிநாட்டுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்ட தேயிலையில் நஞ்சு கலக்கப்பட்டது என்ற வதந்தி பரவியதையடுத்து அக்கால கட்டத்தில் அரசாங்கத்திற்கு பலகோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

வெளிநாட்டில் இத்தேயிலையைப் பாவித்தால் பல லட்சக்கணக்கானோர் பலியாகலாம் என அக்காலப்பகுதியில் எல்லாளன் படைப்பிரிவினால் பலசெய்தி நிறுவனங்களுக்கும லண்டனில் இருந்து செய்தி அனுப்பியிருந்ததாகவும் பொலீஸ் அதிகாரி ஜெயரட்ணம் மேலும் தெரிவித்தார்.

(ஐ-6)

# வலி - மேற்குப் பகுதியில் மேலும் 25 சமுர்த்தி அதிகாரிகள் நியமனம்

மூளாய்,ஓக.15

வலிகாமம் மேற்குப் பகுதிகளில் கடமையாற்றுவதற்கென மேலும் இருபத்தைந்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மிகவிரைவில் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

மேற்படி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு இதுவரை சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. எனவே இப்பகுதிகளில் உள்ள அனைத்துக் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும் இந்த நியமனம் செய்யப்படவுள்ளது.

இப்பதவிகளுக்கு பொருத்தமானவர்களது பெயர்ப் பட்டியல் ஏற்கனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-99)

## சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.15

நல்லூர்க்கந்தன் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு யாழ். கலா ஜோதி இளைஞர் ஒன்றியம் சமய அறிவுப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

இப்போட்டியில் வேறுபாடின்றி எல்லோரும் கலந்து கொள்ளமுடியும். இதற்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 25ஆம் திகதியாகும்.

முதலாம் பரிசாக தங்கப் பதங்கமும், 2ஆம் பரிசாக வெள்ளிப் பதக்கமும் இரண்டாயிரம் ரூபா பணமுடிச்சும், 3ஆம் பரிசாக வெண்கலப் பதக்கமும் ஆயிரம் ரூபா பணமுடிச்சும் வழங்கப்படவுள்ளன. (க)

## எலும்புக்கூடு மீட்பு

வவுனியா,ஓக.15

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து புலிகளால் மீட்கப்பட்ட நெடுங்குளம் பகுதியில் மனித எலும்புக்கூடு ஒன்று மீட்கப்பட்டிருப்பதாக வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

(ஐ-9)

**உதயவாக்கு**

**நாம்படும் துன்பத்தைப் பிறர் தெரிந்து கொண்டு இரக்கப்படுகிறார்கள் என்று அறிந்தால் - நம் துன்பம் உடனே குறைந்து போகிறது.**

- *மு.வ*


**நாளை**

**ஆடி 32**

**புதன்கிழமை**

*திதி:* பிரதமை
நண்பகல் 12.16 வரை.
*நட்சத்திரம்:* சதயம்
இரவு 4.41 வரை.
*சுபநேரம்:* 4.35 - 6.05
*ராகுகாலம்:* 12.05 - 1.35
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்



## திருப் பெருவடிவைக் காட்டு!

கார்த்திகேயா குமரா கணமேனும் தொழமறவோம்
கண்மூடி மௌனியாய் நீ புன்னகைத் திருப்பதேனோ
பார்த்தாயா தமிழரிம் மண்ணிலே படுதுயர்கள்
பாராது நீயிருந்தால் தீராதுகொ டுமையென்றும்
நேர்த்தியாய் உலகறியும் தமிழரினப் படுகொலையை
நீயறிய வில்லையோ நின்திருவாய் மலர்ந்திடாதோ
வார்த்தையால் பயனில்லை வடிவேலா விண்ணப்பம்
வண்ணமயில் மீதுதிருப் பெருவடிவைக் காட்டுமையா.

*- கைதையூரான் -*

## வாழ்வளிப்பான் வேற்குமரன்

நெற்றிப் பொறியுதிர்த்த
நிமலன் முன் தோன்றியவன்
நெஞ்சறியப் பிரணவத்தின்
நீள் பொருளைச் சாற்றியவன்
ஒற்றித்திரிந்த வள்ளி
உள்ளத்திற் கூடியவன்
உவகைக்கு உரியோரின்
உறைவிடங்கள் நாடியவன்
வெற்றிப் படைத்திறத்தில்
வெஞ்சமரும் ஆடியவன்
விடிவள்ளித் தேவ
விண்ணோர்க்குச் சூடியவன்
வற்றிப் போகாத
வாழ்வளிப்பான் வேற்குமரன்
வண்ண மயில்ஏறும்
வடிவழகுக் கதிரேசன்

*- அன்பறிவன் -*
(கிளிநொச்சி)

## அருளுவாய் முருகா!

**மனிதரை மனிதர் அழித்திடும் நிலை**
**மண்ணிலே நீங்கிட அருளுவாய் முருகா!**
**இம்மையில் இந்தத் தலைமுறை பிழைத்திட**
**இதய அருள் சுரந்திடு முருகா!**

**பண்பற்ற மானிட வாழ்க்கை எல்லாம்**
**மண்ணிலே நீங்கிட அருளுவாய் முருகா!**
**சுதந்திரமான சுகங்களெல்லாம் எம்மைச்**
**சூழ்ந்திட அருளுவாய் முருகா! முருகா!!**

*- கா.கணேசதாசன் -*

## இடர் களைய வருவாய்

அருளோடு இனிதான ஆனந்த ரூபனாய்
அண்டசடாசரத் துள்ளுறையும் முருகோனே
மருவியிரு மங்கையர் பாகமாய் வேலுடன்
மயில்மீதில மர்ந்தருளும் மால்மருகோனே
அகதிவாழ் வின்துயர ருவிபோல் வருவதை
அறிந்தும் மறியாதி ருப்பதேனோ?
அனுதினமும் நின்நினை வகலாது ன்பதிக்கு
வந்துழ லும்நிலைநீ யறியாயோ?

திருவோடு ஏந்தும் திக்கற்ற நிலைகாண
திருவுள முமக் கேனையா?
நல்லூரின் பதியுறையும் வடிவேல் முருகா
வந்தெம் மிடர் தீராயோ?
வருவாய் வீந்தெமக் கருள்வாய்யென்று வலம்
வந்து மெம்நிலை யறியாயோ?
கருணைமா மயிலோனே கார்த்திகேயா எம்மிடர்
களைந்திட வருவாய் கந்தவேளே.

*- நா.தாட்சாயனி -*

# அரசும் எதிரணியினரும் புலிகளின் நோக்கத்தை இன்னும் உணரவில்லை!

**நாடு தற்போது யுத்த சூழ் நிலையில் உள்ளது. நாளாந்தம் இடம்பெறும் சம்பவங்கள் ஏதோ ஒரு தரப்பினருக்கு சாதகமாக அல்லது பாதகமாக அமையலாம். நிலைமைகளை ஆய்வு செய்பவர்களும் அச்சம்பவங்களைத் தனது கண்ணோட்டத்தில் சாதகமாக அல்லது பாதகமாக ஆராயலாம். சமீபத்திய சில சம்பவங்கள் குறித்து கீர்த்தி வர்ண குல சூரியா என்பவரால் எழுதப்பட்டு 30.07.2000 திகதிய 'திவயின' ஞாயிறு இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

இரண்டாயிரமாம் ஆண்டு முடிவடைய இன்னும் சில மாதங்களே உள்ளன. பிரபாகரன் யுத்தத்தை முன்னெடுத்துச் செல்கிறார் என்பது தெளிவு. அரசமைப்புத் திருத்தம் பற்றியோ நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்கள் பற்றியோ எந்தவொரு அக்கறையும் கொள்ளாத புலிகளின் தலைவரின் ஒரேயொரு குறிக்கோள் சிங்கள, தமிழ் தலைவர்களை அழிப்பதாகும். மரணத்திற்கான பிடியாணை அனைவருக்கும் பிரபாகரனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவரை அழைத்துப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதன் மூலம் வட பகுதிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என அதிகார ஆசை கொண்டுள்ள ஒரு சிலர் கூறுகிறார்கள். ஆனால் இவ்வாறு கூறுபவர்கள் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தவுடன், பிரபாகரன் தனது படுகொலைத் திட்டத்தைச் செயற்படுத்துகிறார். இதுதான் நாட்டின் உண்மை நிலைமை. அரசாங்கமும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் விடுதலைப் புலிகளின் நோக்கத்தை இன்னும் புரிந்து கொள்ளவில்லை.

ஐ.ஆர்.ஏ. அமைப்பினரால் பிரித்தானிய சிப்பாய்கள் படுகொலை செய்யப்பட்டபோது படுகொலை செய்யப்பட்ட சிப்பாய் ஒருவரின் தந்தையான மைக்கல் பின்வருமாறு தெரிவித்தார்:-

"யாராவது இதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் எனது மகனைப்போல நூற்றுக் கணக்கானோர் பலியாக நேரிடும்" - எனத் தெரிவித்திருந்தார்.

வடக்கில் பயங்கரவாதிகளின் தாக்குதலை முறியடிக்கும் நோக்கில் பல்குழல் றொக்கட் லோஞ்சர்கள் படையினருக்கு வழங்கப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகள் மீது இந்த ஆயுதம் கொண்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசு வெளியிடும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக பல்குழல் ஆயுதத்தால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களின் பாதிப்புக்களை உணர்ந்து விடுதலைப்புலிகளின் தலைவர் அந்த உபகரணம் பொருத்தப்பட்ட வாகனங்கள் எங்கு நிறுத்தப்பட்டுள்ளன என்பதைக் கண்டறிய உளவாளிகளை அனுப்பிவைத்துள்ளார் எனத் தெரியவருகிறது.

இதற்கிடையில் இராணுவ உயர் அதிகாரிகளின் மாற்றங்கள் குறித்து பரவலாக விமர்சிக்கப்படுகிறது.

## தமிழ்ப் பத்திரிகைகள்

தேசியப் பாதுகாப்பைப் பெரிதும் பாதிக்கும் செய்திகள் தமிழ்ச் செய்தித் தாள்களில் பெரியளவில் பிரசுரமாகின. கொழும்பு நகரில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுப் பெரும் எடுப்பில் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கொழும்பிலிருந்து வெளியாகும் "வீரகேசரி" தமிழ்ப் பத்திரிகை முந்திக் கொண்டு செய்தி வெளியிட்டது.

வளைகுடா யுத்தத்தின்போது பல்வேறு படையணிகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் குறித்து பத்திரிகைகள் எவையும் பிரசாரங்களை மேற்கொள்ளவில்லை. இருப்பினும் எமது நாட்டில் நிலைமை முற்றிலும் மாறுபட்டதாகும். படை அதிகாரிகளின் மாற்றங்கள் தொடர்பான எந்த ஒரு தகவலையும் விடுதலைப் புலிகளின் உளவாளிகளால் பெறமுடிகிறது. பலகாரங்களைத் தட்டில் வைத்து வழங்குவதுபோல் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் பற்றிய விவரங்கள் மாத்திரமன்றி அவர்களின் மாற்றங்கள் குறித்த தகவல்களும் வெளியாகின்றன.

"வாஷிங்டன் போஸ்ட்" "நியூ யோர்க் ரைம்ஸ்" போன்ற பத்திரிகைகள் ஒருபோதும் அமெரிக்கப்படைகளின் உயர் அதிகாரிகளின் பெயர்களைப் பிரசுரிப்பதில்லை. கொசவோ பகுதியில் பணியாற்றும் அமைதிப் படையின் கட்டளை அதிகாரிகளின் பெயர் மாத்திரம் சர்வதேச ஊடகங்களில் வெளியாகின்றன.

## கப்பல் கட்டும் தளம் ஜப்பானியருக்கு விற்கப்பட்டதேன்?

நிலைமைகள் இவ்வாறு இருக்கையில் கொழும்பிலுள்ள கப்பல் கட்டும் தளத்தில் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த வேலை நிறுத்தம் இடம்பெற்றபோது யுத்தத்துக்குப் பயன்படுத்துவதற்காக பல கடற்கலங்கள் அங்கு நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. பொறியியலாளர் உட்பட பல ஊழியர்கள் நாள் ஒன்றுக்கு மேலதிகமாக 5 மணித்தியாலங்கள் எதுவித கொடுப்பனவுகளும் பெறாமல் பணியாற்றி அந்தக் கடற்கலங்களின் நிர்மாணப் பணிகளில் ஈடுபட விருப்பம் தெரிவித்திருந்தனர். ஆனால் ஆர்.பிரேமதாஸாவின் ஆட்சிக்காலத்தில் அனுசரிக்கப்பட்ட வழிமுறைகளில் ஊறிப்போன உயர் அதிகாரி அதற்கு உடன்படவில்லை. தேசியப் பாதுகாப்பு நிதிக்கு, நிதி சேர்க்கப்பட்டால் அந்தநிதியை அலரிமாளிகைக்குக் கொண்டு சென்று கையளிக்க அந்த அதிகாரி விருப்பம் தெரிவித்தார்.

கடற்படைக்குத் தேவையான கடற்கலங்களைக் கட்டுவதற்கு கோடிக்கணக்கிலான பொது நிதியைக் கடற்படையினர் கப்பல் கட்டும் தளத்துக்கு வழங்கும்போது போர் வீரர்களுக்கு அளிக்கப்படும் கௌரவம் இந்த வகையிலேயே அமைந்துள்ளது. கப்பல் கட்டும் தளத்தின் பின்னணியைப் பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டும்.

தேசியப் பாதுகாப்புத் தொடர்பாக தற்போது ஈனக்குரல் எழுப்பும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த - அதிகார ஆசை கொண்ட - அரசியல்வாதிகளின் இலாபமான வியாபாரப் பொருளாகக் கருதப்பட்ட கப்பல் கட்டும் தளம் 1994 இல் பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஜப்பானிலுள்ள "தளாச்சி" கப்பல் கட்டும் தளத்துக்குக் கையளிக்கப்பட்டது.

கொழும்புத் துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கப்பல் கட்டும் தளத்துக்கு மிக அண்மையில் கடற்படைத்தளம் உள்ளது. கடற்படைத் தளத்துக்கு அண்மையில் உள்ள ஒரு நிறுவனத்தை வெளிநாடு ஒன்றிடம் கையளிப்பது தேசியப் பாதுகாப்புக்கு உகந்ததல்ல. இந்தியாவில் விசாகப்பட்டினத்திலுள்ள கடற்படை மற்றும் நீர்மூழ்கிக் கப்பல் கட்டும் தளத்துக்கு அண்மையிலிருந்த நிலத்தை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது பாதுகாப்புத்துறை மற்றும் தொழிற் சங்கங்கள் எழுப்பிய எதிர்ப்புக் காரணமாக அந்த முயற்சி கைவிடப்பட்டது. பங்களாதேசில் சிட்டாகொங் துறைமுகத்துக்கு அருகில் கொள்கலன்களைக் கையாளும் தொகுதி ஒன்றை அமைக்கும் உரிமத்தை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவது தொடர்பாக அந்நாட்டில் கடும் எதிர்ப்புக்கள் உருவாகியுள்ளன.

தென்கிழக்கு ஆசியாவில் சிங்கப்பூருக்கு அடுத்ததாக சிறந்த கப்பல் கட்டும் தளம் கொழும்பிலுள்ளதாகும். இது ஜப்பான் நாட்டுக்கு விற்கப்பட்டுள்ளதால் அங்கு என்னென்ன யுத்தக் கலங்கள் கட்டப்படுகின்றன, அந்தக் கலங்களில் என்னென்ன ஆயுதங்கள் பொருத்தப்படவுள்ளன போன்ற விவரங்களை ஜப்பானியர் அறிவர். நாட்டின் பாதுகாப்புத் தொடர்புடைய கப்பல் கட்டும் தளத்தை ஜப்பானியருக்கு விற்பதற்கு அன்று அதிகாரத்திலிருந்த கூட்டத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் துரோகச் செயல் அல்லவா?

வடக்கில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் கடற்படைக் கலங்களைக் கட்டுவதற்கும் பழுது பார்ப்பதற்குமென இருந்த ஒரேயொரு கப்பல் கட்டும் தளத்தை விற்கவேண்டிய தேவைதான் என்ன? இதனால் இன்று கடற்படையினர் பெருந்தொகையான பணத்தை ஜப்பான் நிறுவனத்துக்கு வழங்க வேண்டி உள்ளது. அரசாங்கத் தகவல்களின்படி ஆரம்பத்தில் ஜப்பான் நிறுவனம் 51 சதவீதமான பங்குகளைக் கொண்டிருந்தது. ஆனால் தற்போது 61 சதவீதமான பங்குகளைக் கொண்டுள்ளது. பிரபாகரன் ஒரேயொரு குறிக்கோளுடன் செயற்பட்டுவரும் வேளையில் அதிகார ஆசை கொண்டவர்கள் அன்று செயற்பட்ட விதம் இதுவே.

## இவ்வளவு செலவில் சஞ்சிகை அச்சிடலாமா?

இந்தவாறு பாதுகாப்புத் தொடர்பான தகவல்கள் இவ்வாறு வெளிவந்துகொண்டிருந்த போது தியத்தலாவையிலுள்ள விமானப் படையினரின் பயிற்சி நிலையம் குறித்த தகவல் ஒன்றும் வெளியானது. விமானப்படை வீரர்களுக்கான 6 மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படும் சஞ்சிகை ஒன்றை தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த ஓர் ஒப்பந்தகாரரிடம் கையளித்து அச்சிட்டு வழங்குவதற்கான ஒழுங்குகளை அந்தப் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மேற்கொண்டனர். அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் என ஒன்று இருக்கையில் தனியார் மூலம் அச்சிடப்பட்ட அந்தச் சஞ்சிகைக்காக பெருமளவு பணம் செலவிடப்பட்டது.

இவ்வாறு வீணாக்கப்பட்ட பணத்தைக் காப்பரண்களில் பணியில் ஈடுபட்டுள்ள விமானப்படையினரின் நலன்புரிச் சேவைகளுக்குப் பயன்படுத்தியிருந்தால் அது சிறந்த சேவையாக அமைந்திருக்கும். அமெரிக்கா மற்றும் பிரித்தானியா படையினருக்காக அச்சிடுவதுபோல் 'உள்வீட்டுச் சஞ்சிகை' (**In House Magazine**) அச்சிடப்பட வேண்டுமா? விமானப்படைத் தளபதி ஜயலத் வீரக்கொடி இது குறித்து என்ன கூறுகிறார்? ஒரு சவர்க்காரக் கட்டிக்குக் கூட இந்த நாட்டு மக்கள் வரி செலுத்தும் வேளையில் - தங்கள் இரண்டு நாள் சம்பளத்தை யுத்த நிதியாக வழங்கும்போது - இவ்வாறான வர்ணச் சஞ்சிகைகள் யாருக்காக?

பல பக்கங்களைக் கொண்ட வர்ண சஞ்சிகையை அச்சிட்டு அதில் தங்கள் படங்களைப் போட்டுள்ள விமானப் படையினர் இந்த நாட்டில் மாத்திரமே உள்ளனர். உலகில் வேறெங்கும் இத்தகையவர்களைக் காணமுடியாது.

## அமெரிக்கர்களின் துரோகத் தனம்

இதற்கிடையில் வெளிநாட்டுக் கிளர்ச்சியின் போது அமெரிக்கர்கள் மேற்கொண்ட துரோகத்தனம் குறித்த செய்திகள் கடந்த ஜூலை 24ஆம் திகதி வெளிவந்துள்ளன.

கொலம்பியா நாட்டில் மா சே துங்கின் கொள்கையை உடைய கெரில்லாக்களைச் சுற்றிவளைக்கச் சென்ற 13பேரைக் கொண்ட விசேட பொலிஸ் பிரிவினரிடம் இருந்த ரவைகள் முடிவடைந்தன. அந்தப் பொலீஸார் சிக்குண்டிருந்த வேளையில் அதிநவீன "பிளாக் ஹோக்" (**Black Hawk**) ஹெலிகளை பயன்படுத்த வேண்டாம் என பொபோட்டோ நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகம் கொலம்பியாவில் உள்ள படையினருக்குக் கட்டளையிட்டது. போதைவஸ்து ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு மாத்திரமே அந்தக் ஹெலிகளை அமெரிக்க அரசு வழங்கியது எனத் தெரிவிக்கப்பட்டது. அமெரிக்க அரசு அனுசரித்த இந்த உப்புச் சப்பற்ற கொள்கை காரணமாக கெரில்லாக்களால் சுற்றிவளைக்கப்பட்ட அந்த 13 பொலீஸாரும் படுகொலை செய்யப்பட்டனர். அமெரிக்காவின் இந்தச் செயற்பாடு கொலம்பியாவில் உள்ள இராணுவ அதிகாரிகளுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது. இந்நிலையில் ஸ்ரீலங்காவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான நல்லுறவை மதிக்கும் விதத்தில் ஜூலை 25ஆம்திகதி கொழும்பில் வைபவம் ஒன்று இடம் பெற்றது. அந்த வைபவத்தில் ஸ்ரீலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவர் ஷவுன் டொனலி ஸ்ரீலங்கா வெளிநாட்டமைச்சர் லஷ்மன் கதிர்காமரிடம் செய்மதி மூலம் எடுக்கப்பட்ட ஸ்ரீலங்காவின் படங்கள் சிலவற்றைப் பரிசாக அளித்தார். அமெரிக்கர்கள் தமது **KA**-1, **KA**-2, இராணுவச் செய்மதிகள் மூலம் வடக்கிலுள்ள யுத்த நிலைமைகளை (நிலைகளை) படம் எடுத்திருக்க மாட்டார்கள் எனக் கூறமுடியுமா?

அமெரிக்கத் தூதுவர் அந்த வைபவத்தில் பேசும் போது பின் வருமாறு கூறினார்.

"யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் அமெரிக்கா பன்னெடுங்காலமாகத் தொடர்புகளைக் கொண்டுள்ளது. 19 ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் அமெரிக்க ஆசிரியர்களும் மிஷனரிமார்களும் அப்பகுதியில் (யாழ். குடாநாட்டில்) பல்வேறு சேவைகளை ஆற்றியுள்ளனர்" எனத் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான 'இந்து சாதனம்' மற்றும் 'ஈழகேசரி' ஆகிய பத்திரிகைகள் மைக்ரோ பிலிம் (சிறிய அளவில் பிரதி பண்ணுதல்) முறையில் பிரதி பண்ணப்பட்டு அவற்றை யாழ்.பொது நூலகத்துக்கு வழங்கும் பொருட்டு அவை வெளிவிவகார அமைச்சரிடம் கையளிக்கப்பட்டன. வெளி நாட்டமைச்சர் அவற்றை ஸ்ரீலங்கா மக்கள் சார்பாகவும் யாழ்ப்பாணக் குடிமக்கள் சார்பாகவும் கையேற்றார்.

இதிலிருந்து ஸ்ரீலங்கா மக்கள் மற்றும் யாழ்ப்பாணக் குடிமக்கள் வெவ்வேறானவர்கள் என்ற தோற்றம் வெளியாகிறதல்லவா? யாழ்ப்பாணக் குடிமக்கள் ஸ்ரீலங்கா மக்களைச் சேராதவர்களா?

இது புதுமையான விடயம் அல்ல. அமெரிக்க ராஜாங்க அமைச்சின் ஆசியப் பிரிவில் பணியாற்றும் படவரைஞர்கள் ஏற்கனவே ஆசியாவில் துண்டாடப்படும் அரசுகள் தொடர்பான வரைபடங்களைத் தயாரித்து முடித்து விட்டனர் எனத் தெரியவருகிறது.

அமெரிக்காவின் சி.ஐ.ஏ. அமைப்பின் நோக்கமும் அதுவே.

இதற்கிடையில் வடக்கில் மூன்று மாதங்களுக்கு முன்னர் நிலவிய நிலைமை தற்போது ஓரளவு சீரடைந்துள்ளபோதிலும் விடுதலைப் புலிகளின் தலைவர் மீண்டும் நடவடிக்கை மேற்கொள்வதற்காகத் தயாராகி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. புலிகளின் இந்த நடவடிக்கைக்கு முன்னரே பல்குழல் றொக்கட் லோஞ்சர் தாக்குதல்களைப் படையினர் மேற்கொள்ள முடியாதா?

**-தமிழில்: கஜனி-**

கொழும்புத் துறைமுகத்தில் குண்டுகளை வெடிக்கவைக்கவென வந்துள்ள குழுவைச் சேர்ந்த ஒருவர் இந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளார். பல்வேறு அழிவுகளை ஏற்படுத்துவதே அவர்களின் நோக்கமாகும். கடந்த கால நிகழ்வுகளைக் கவனிக்கையில் ஓகஸ்ட் மாதத்தில் பல்வேறு அழிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன என்பது தெளிவாகிறது.

"எதிரியின் இலக்குகளைத் தெரிந்துகொள்ளுங்கள். அப்போது தான் எதிரியின் தாக்குதல்களைத் தடுக்கலாம்" என ஷிம்பென் பொலீஸ் அதிகாரி ஜெருசலேம் பொலீஸாருக்குத் தெரிவித்தார். இருப்பினும் நாங்கள் அதற்குத் தயாராகவுள்ளோமா?

பல வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட எவ்.700 விமானம் ஒன்று அண்மையில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சமீபமாக விழுந்து நொறுங்கியது. பயிற்சியின்போது வீழ்ந்து நொறுங்கிய மூன்றாவது விமானம் இதுவாகும். ★


## ரஷ்யாவில் உயர்கல்வி

*சர்வதேச அங்கீகாரம் பெற்ற மொஸ்கோ, லுமும்பா போன்ற ரஷ்யப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில அனுமதி பெற்றுத் தரப்படும்.*

1. மருத்துவம் (ஆங்கிலம்)
2. பொறியியல் (ஆங்கிலம்)
3. கணனியியல் (ஆங்கிலம்)
4. ஏனைய துறைகள் - பொருளாதாரம் போன்றவை.

இறுதிச் சந்தர்ப்பம்

*மேலதிக விவரங்களுக்கு உடனே தொடர்பு கொள்ளவும்*

Dr. க. சிவனடியான்

நவாலி, மானிப்பாய்.

(77182)


## நன்றி நவில்தலும் சபிண்டீகரணமும்



தோற்றம் 24 - 04 - 1931

மறைவு 16 - 07 - 2000

திருமதி

**கனகம்மா கனகசபை**

16-07-2000 இல் சிவபதமேகிய திருமதி கனகம்மா கனகசபை அவர்கள் நோயுற்றிருந்த காலத்தில் பலவழிகளில் உதவி செய்து ஆதரித்த அன்புள்ளங்களுக்கும், அவரின் மரணச்சடங்கில் பங்கு பற்றியவர்களுக்கும் சபிண்டீகரண சடங்கில் பங்கு கொள்ளும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

**கணவன், மகன், அண்ணன், அக்காமார், பெறாமக்கள்.**

*3/1, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.*

(77279)

# பல்லின மக்களும் ஒன்றிணைந்து கூடும் மடுத் திருப்பதி அன்னையின் உற்சவம்

அருள் திரு.
ரூபன் மரியாம்பிள்ளை



மடுத்தாயிடம் மண்ணுக்கு அமைதி வேண்டிச் செபிப்போம்.

இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் மடுப்பதிக்கு ஒரு விசேட இடமுண்டு. ஆரம்பம் முதல் இன்று வரை தமது பல வேறுபாடுகளையும் மறந்து சிங்களவரும் தமிழரும் கத்தோலிக்கர் என்ற இணைப்பில் ஒன்றுசேரும் இடம் மடுத்

## மண்ணுக்கு அமைதி வேண்டி மடுத்தாயிடம் செபிப்போம்!

தாயின் மடுப்பதியாகும்.

அண்மைக் காலங்களில் நாட்டு நிலைமை காரணமாக மடுப்பதிக்கு வரும் சிங்களக் கத்தோலிக்கர் தொகை வெகுவாகக் குறைந்து விட்டது. இவ்வருடம் யூபிலி ஆண்டு என்ற வகையில் ஏராளமான மக்கள் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து கூடி இருக்கவேண்டும். ஆனால் யாழ்ப்பாண மக்களுக்கு இந்த வாய்ப்பு கைகூடாமலே போய்விட்டது.

கொழும்புப் பகுதியில் இருந்து சுமார் 30 ஆயிரம் சிங்களவர் மடுப்பகுதியில் இம்முறை கூடுவர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இக்கட்டுரை எழுதும் நேரம் வரை மடுவுடன் தொலைபேசித்தொடர்பு கிடைக்



காதபடியால் கூடும் பக்தர்களின் சரியான எண்ணிக்கையை அறிய முடியவில்லை. வவுனியாப் பங்குத் தந்தை ஜெயபாலன் குறூஸ் அடிகளிடம் தொடர்பு கொண்டபோது வவுனியா போக்குவரத்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தமக்கு முன்னர் அறிவிக்கப்பட்டபடி 30ஆயிரம் பேர் வரவில்லை என்றும் 15ஆயிரம் பேர் மட்டில் வந்திருக்கலாம் என்றும் தெரிவித்ததாகக் கூறினார்.

மன்னார் மறை மாவட்டத்தில் இருந்து மடுப்பதிக்கு சென்றோர் எண்ணிக்கையைக் கேட்டபோது ஏறக்குறைய 10ஆயிரம் பேர் மட்டில் அங்கு போயுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். வவுனியாப் பங்கைப் பொறுத்தவரையில் வவுனியா, செட்டிக்குளம், பம்பைமடுப் பதியில் இருந்து ஏராள மானவர்கள் மடுவுக்குப் போகத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் ஒருவருக்கு 400ரூபா மட்டில் செலவாகும் என்று அறிந்தபோது அனேக மானவர்கள் தமது முயற்சியைக் கைவிட்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாண்டு யூபிலி ஆண்டுக் கொண்டாட்டங்களை மடுப்பதியில் சிறப்பிக்க மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையுடன் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் காலி ஆயர் எல்மோ பெரேறா ஆண்டகையும் வருகை தந்துள்ளனர்.

இலங்கை மண்ணில் நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வும் அமைதியும் சமாதானமும் நிலவ தேவ அன்னை அருள்பாலிக்க விசேட வேண்டுதல்களை இவர்கள் சமர்ப்பிப்பர்.

இயேசு கிறிஸ்துவின் தாய் அன்னை மரியாள். இறைவனின் தாய் என அழைக்கப்படும் இந்த தேவதாய் தாம் காட்சி கொடுத்த அல்லது எழுந்தருளி இருக்கின்ற இடங்களுக்கேற்ப பல பெயர்களைக் கொண்டுள்ளார். தேவமாதா, கன்னிமரியாள், ஆரோக்கியமாதா, பரலோக மாதா, பத்திமா மாதா, லூர்து மாதா, வேளாங்கண்ணி மாதா, கப்பலேந்தி மாதா, கதிரை மாதா, மடுமாதா என்று அழைக்கப்படுவதெல்லாம் இறைவனின் தாய் அன்னை மரியாளையே குறிக்கும்.

ஆவணி மாதம் 15ஆம் திகதி இந்த வேத அன்னையின் விண்ணேற்புத் தினமாகும். இயேசுக் கிறிஸ்துவிற்கு அடுத்தபடியாக ஆன்மாவோடும் உடலோடும் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டவர் அவரின் தாயான தேவ அன்னையாவார். எந்தவிதமான பாவ மாசும் அணுகாமல் அவர் பாதுகாக்கப்பட்டவர். எனவேதான் இயேசுவின் உடலைப் போல இவர் உடலும் அழிந்துவிடவில்லை. 1950 ஆம் ஆண்டு 12ஆம் பத்திநாத பாப்பரசர் இதனை ஒரு மறை உண்மையாகப் பிரகடனப்படுத்தினார். இந்தத் தினமான ஆவணி 15ஆம் நாள் கத்தோலிக்க மக்கள் எல்லோரும் ஆலயத்திற்குச் சென்று திருப்பலி கண்டு வேண்டும் கடன் திருநாளாகவும் உள்ளது.

தேவ அன்னை விண்ணேற்படைந்த இந்த நாளை தேவதாயின் பெயர் கொண்ட ஆலயங்களில் எல்லாம் இன்று சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த வகையில் யாழ். புனித மரியன்னை பேராலயம், நாவாந்துறை பரலோகமாதா ஆலயம், கரவெட்டி மாதா கோவில், சில்லாலை கதிரைமாதா ஆலயம், மடு மடுமாதா யாத்திரைத்தலம் என்பன இங்குக் குறிப்பிடத்தக்கனவாகும்.

இன்று உலகெங்கிலும் தேவ அன்னை பெயரால் கட்டி எழுப்பப்படும் ஆலயங்களும் யாத்திரைத் தலங்களும் அங்கு கூடும் மக்கள் வெள்ளமும் தேவ அன்னையின் புகழைப் பறைசாற்றி தேவ அன்னையின் பக்தியை வளர்க்கின்றன.

பிரான்ஸில் லூட்ஸில் உள்ள லூர்துபதி, போர்த்துக்கலில் மார்சபியேலில் உள்ள பத்திமாபதி, இங்கிலாந்தில் வோல்சிங்கில் உள்ள மாதாபதி, இந்தியாவில் வேளாங்கண்ணியில் உள்ள வேளாங்கண்ணி மாதாபதி, இலங்கையில் மடுவில் உள்ள மடுமாதாபதி இவைகள் எல்லாம் அன்னையின் புகழ் பாடும் குறிப்பிடத்தக்க யாத்திரைத் தலங்களாகும்.

மடுப்பதியின் வரலாறு 4 நூற்றாண்டுகளுக்கு மேலும் பழமை வாய்ந்தது. 16 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் - 1670 ஆம் ஆண்டு - கிறிஸ்தவர்களுக்கெதிரான வேத கலாபனை நடைபெற்றுக்கொண்டிருந்தது. மன்னார் மாந்தையில் வாழ்ந்த 20 கத்தோலிக்க குடும்பத்தவர்கள் தமது கோவில் பாதுகாவலியான செபமாலை அன்னையின் திருச்சுருபத்தைப் பாதுகாப்பதற்காக அடர்ந்த காட்டுப் பிரதேசமான மடுவிற்குக் கொண்டு வந்தனர். அன்றைய தினமே மடுப்பதியின் வரலாறு ஆரம்பமானது.

1695ஆம் ஆண்டு கோவைக் குருக்கள் புனித யோசவ்வாஸ் முனிவரின் தலைமையில் மடுப்பதியைப் பொறுப்பேற்றனர். பாழடைந்து கிடந்த ஆலயத்தை திருத்திக் கட்டி புது மெருகூட்டி திருநாள்களையும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடத் தொடங்கினர். 1705ஆம் ஆண்டுத் திருவிழாவில் புனித யோசவ்வாஸ் அடிகள் பங்குபற்றினார் என்று கூறப்படுகின்றது.

1823இல் மண்ணால் கட்டப்பட்ட குடிசைக் கோயிலே இன்று அன்னையின் புதுமைகளாலும் யாத்திரீகர்களின் வருகையினாலும் இலங்கை வாழ் மக்கள் அனைவரையும் இணைக்கும் மடுப்பதியாக கம்பீரமாக உயர்ந்து காட்சியளிக்கிறது.

ஆயர் யூலன் ஆண்டகையின் காலத்தில் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் தேவதாய் மீது விசேட பக்தி வளர்ந்தது எனலாம். மடுத்தாயின் மேல் விசேட பக்தி கொண்ட அவர் மடுப்பதியின் வருடாந்தத் திருநாள்களில் தாமே தலைமை வகித்தும் மாலை வழிபாடுகளில் பிரசங்கமும் செய்து வந்தார். இதனால் மடு அன்னை மேல் பக்தியும் மடு யாத்திரை செய்வதில் விருப்பமும் உடையவர்களாக யாழ். மக்கள் மாறினர்.

### சின்னமடு

மடுத்தாயின் மேல் யாழ்ப்பாண மக்கள் கொண்ட அளவற்ற பக்தியால் எல்லோருக்கும் மடுத்தாயை தரிசிக்கும் வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்பதாலேயே 1895இல் யாழ்ப்பாணத்தில் தீவுப்பகுதியில் சின்னமடு யாத்திரைத் தலம் தொடங்கப்பட்டது. ஆவணி மாதம் 5ஆம் திகதியில் சின்னமடு திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. கானகத்தில் வாழும் மருதமடு அன்னையிடம் போக முடியாத யாழ். மக்கள் தீவுப்பகுதி சின்னமடு அன்னையிடமே கடந்த சில ஆண்டுகளாக ஒன்று கூடுகின்றனர்.

ஆயர் யூலன் ஆண்டகையைத் தொடர்ந்து யாழ்.மறை மாவட்டத்தை நிர்வகித்த ஆயர் புறோ ஆண்டகையும் மடுத்தாய் மட்டில் விசேட பக்தி கொண்டிருந்தார். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மடு மாதா சுருபத்திற்குத் திருச்சபையின் தலைவரால் முடிசூட்டுவிக்க அவர் பெரிதும் ஆசைப்பட்டு ஆயத்தங்கள் செய்தார். எதிர்பாரா தவிதமாகப் பெய்த பெரும் மழையும் யாத்திரீகர்களுக்கு நீரளிக்கும் குளத்தின் அணைக்கட்டும் உடைந்ததால் திருநாள் தடைப்பட்டது. அடுத்த ஆண்டும் பெய்த பெருமழையால் ஆலய முகப்பு இடிந்து விழுந்தது. முடிசூட்டும் நிகழ்வு தடைப்பட்டது. மடுப்பதியின் 300ஆம் வருட நிறைவை மிகச் சிறப்பாகக் கொண்டாடிய இவர் திடீரென இறந்து போனார்.

### முடிசூடல்

ஆயர் அல்பிறட் கியோமர் ஆண்டகை மடு அன்னைக்கு முடிசூட்டும் வைபவத்துடன் தம் ஆளுகையை ஆரம்பித்தார். 1924ஆம் ஆண்டு ஏறக்குறைய ஒன்றரை லட்சம் மக்கள் கலந்து கொண்ட ஒரு விழாவில் பாப்பரசரின் பிரதிநிதி பேராயர் அந்தோணி சுடேர் மடுமாதாவிற்கு மணிமுடி சூட்டினார்.

1948ஆம் ஆண்டு முதல்தடவையாக மடுமாதா திருச்சுருபம் யாழ். மறைமாவட்டம் முழுவதும் பவனியாக எடுத்துவரப்பட்டது.

1796இல் மாதோட்டம் பகுதியில் பரவிய கொள்ளை நோயைத் தடுக்குமாறு மடு அன்னையின் திருச்சுருபம் மாதோட்டம் பகுதி ஊர்கள் தோறும் கொண்டு செல்லப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

1948ஆம் ஆண்டு மருதமடு அன்னையின் முடிசூட்டு விழாவின் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது.

1949ஆம் ஆண்டு ஆயர் எமிலியானுஸ் ஆண்டகை ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவரின் ஆளுகையில் மடுப்பதி மேலும் வளர்ந்தது. யாத்திரீகர் வசதிக்காகப் பல ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

1974ஆம் ஆண்டு ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை காலத்தில் முடிசூட்டு விழாவின் பொன்விழாக் கொண்டாடப்பட்டது. பொன்விழாக் கொண்டாட்டங்களை மறைந்த கொழும்புப் பேராயர் கர்தினால் தோமஸ் கூரே ஆண்டகை நிகழ்த்தினார். முடிசூட்டு விழாவின் பொன் விழா நினைவாக அன்னையின் திருச்சுருபம் யாழ். மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளுக்கும் யாத்திரையாக எடுத்து வரப்பட்டது.

### மன்னார் தனியான மறைமாவட்டமானது

1981ஆம்ஆண்டு யாழ். மறைமாவட்டத்தில் இருந்து மன்னார் மறைமாவட்டம் பிரிக்கப்பட்ட போது மடுப்பதி மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்தது. அதன் முதல் ஆயரான தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மடுப்பதியிலேயே ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

1993ஆம் ஆண்டு ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகை மன்னார் ஆயரானார். தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்டார்.

1994ஆம் ஆண்டு ஆலய அபிஷேகத்தின் பொன்விழாவும் தங்க யூபிலியும் கொண்டாடப்பட்டது.

1999ஆம் ஆண்டு கார்த்திகை 20ஆம் திகதி மடுமாதா ஆலயம் ஆட்லறி தாக்குதலுக்கு உள்ளானது. அகதிகளாகத் தஞ்சம் புகுந்த 37பேர் கொல்லப்பட்டனர். 64பேர் காயமுற்றனர்.

2000 ஆம் ஆண்டு அன்னை மரியாள் "மருதமடுத் திருச்செபமாலை மாதா" என முடிசூடப்பட்டதன் 75ஆம்ஆண்டு நிறைவு கொண்டாடப்படுகிறது. இதனை நினைவுகூரும் முகமாக திருச்சுருப பவனி ஒன்று மன்னார் மறைமாவட்டம் முழுவதிலும் ஒழுங்கு செய்யப்பட்டது.

தேவ அன்னை - மடுத்தாய் - எமக்கெல்லாம் ஓர் அன்னையாக விளங்குகிறாள். இன, மத பேதமின்றி அனைவருக்கும் அன்புக்கரம் நீட்டும் தாயிடம் நீண்டகாலமாக இனப்போரினால் அல்லலுறும் எம் மண்ணிற்கும் மக்களுக்கும் நீதியோடு கூடிய நிரந்தர தீர்வும் அமைதியும் சமாதானமும் கிடைக்க வேண்டுவோம்!

★

# புங்குடுதீவில் பயிற்சிக் கருத்தரங்கு

வேலணை,ஓக.15

புங்குடுதீவுப் பகுதியில் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வோருக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று அண்மையில் புங்குடுதீவு சர்வோதயக் கட்டடத்தில் இடம் பெற்றது.

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்ட உதவி விவசாயப் பணிப்பாளர் சின்னத்துரை, பாட விடய உத்தியோகத்தர் மற்றும் விவசாயப் போதனாசிரியர் ஆகியோர் வீட்டுத் தோட்டச் செய்கை தொடர்பான பல கருத்துக்களைத் தெரிவித்தனர்.

புங்குடுதீவுமத்தி, மேற்குக் கிராம சேவையாளர் எஸ்.பி.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்குக்கான ஒழுங்குகளை பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்டிருந்தது. (இ-167)

## சூட்டுக்கு இலக்கான வயோதிபர்

நெல்லியடி,ஓக.14

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் வீட்டிலிருந்த வயோதிபர் ஒருவர் எங்கிருந்தோ வந்து தாக்கிய துப்பாக்கிச் சன்னத்துக்கு இலக்காகிக் காயம் அடைந்தார். அவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வல்லிபுரம் பங்கிராஸ் (வயது69) என்பவரே காயமடைந்தார்.

மணல்காட்டுப் பகுதியில் படையினர் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்பட்டது. (உ-3-109)

## வெடி விபத்தில் மரணம்

வவுனியா,ஓக.15

மட்டுவில் பகுதியில் கடந்த சனியன்று இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தின் போது தமது தரப்பில் சிந்தனைச்செல்வி (சிவசுப்பிரமணியம் தமிழினி-யாழ்ப்பாணம்) என்பவர் உயிரிழந்ததாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது. (உ-4)

அலங்கார உற்சவம்

இணுவில் விசாலாட்சி சமேத
விஸ்வேஸ்வர சுவாமி திருக்கோயில்
இன்று (15-08-2000) செவ்வாய்க்கிழமை தொடக்கம்
29-08-2000 செவ்வாய்க்கிழமை வரை
உற்சவம் நடைபெறும்.
அம்மன் வாசல் உற்சவம் ஆரம்பம்: 04-09-2000

தர்மகர்த்தா
சீ. பரமேஸ்வரன்

ஆலயகுரு: வா. ஜெயவஸ்த்தாங்கசர்மா
பிரதமகுரு: தா. வாசுதேவ சிவாச்சாரியார்
(77062)

# சமாதான முயற்சிகள் தோற்ற நிலையில்

# காஷ்மீரில் நிலைமை மோசமடைகிறது!

**உலக உலா**

**என்.பி.சீலன்**

ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கம் தாக்குதல் நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததை அடுத்து ஜம்மு - காஷ்மீர மாநிலத்தில் மீண்டும் வன்முறைகள் வெடித்துள்ளன. ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கம் கடந்த மாதம் 24 ஆம் திகதி ஒரு தலைப்பட்சமாக தாக்குதல் நிறுத்தத்தை அறிவித்தது. பேச்சுவார்த்தை



சமீபத்தில் ஸ்ரீநகரில் இடம்பெற்ற கொலைகளைக் கண்டித்து, பயங்கரவாதத்தைக் குறிக்கும் கொடும்பாவி ஒன்றை ஆர்ப்பாட்டக் காரர்கள் எரிக்கின்றனர்.

நடத்துவதற்கு இந்தியாவுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அந்த இயக்கம் இம் மாதம் 8ஆம் திகதி தாக்குதல் நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டது. தாக்குதல் நிறுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு இரு நாள்களில் - அதாவது 10 ஆம் திகதி ஜம்மு - காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரில் இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்பில் 15 பேர் கொல்லப்பட்டனர். 40 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் படையினரை இலக்குவைத்து மிகவும் சாதுரியமாக நடத்தப்பட்டது. முதலில் தீவிரவாதிகளால் கிரனேட் ஒன்று வெடிக்க வைக்கப்பட்டது. படையினர் அப்பகுதியைச் சுற்றிவளைத்து அங்கு

## பயங்கரவாத நடவடிக்கை மூலம் இந்தியாவை பணிய வைப்பதற்கு பாகிஸ்தான் முயற்சி



காஷ்மீர் முதலமைச்சர் பாருக் அப்துல்லாவின் தாயாரின் மரணச்சடங்கில் கலந்துகொள்ள ஸ்ரீநகர் சென்ற பிரதமர் வாஜ்பாய், உள்துறை அமைச்சர் அத்வானி ஆகியோர் பாருக் அப்துல்லாவுடன் அளவளாவும் காட்சி.

அனாதரவாக நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றைச் சோதனையிட முயன்றபோது தானியக்கிக் கருவி மூலம் காருக்குள் இருந்த குண்டு வெடிக்க வைக்கப்பட்டது. ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கம் இந்தத் தாக்குதலுக்கு இன்னும் உரிமை கோர வில்லை. ஆனால் ஜம்மு - காஷ்மீரில் பாகிஸ்தானுக்கு சார்பான இந்த இயக்கம் தனது தாக்குதல் நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதாக அறிவித்து இரு நாள்களில் இந்தக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றிருப்பதால் இந்த இயக்கமே இதனை நடத்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பாகிஸ்தானைப் பிரதான தளமாகக் கொண்டியங்கும் ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கம் திடீரென தாக்குதல் நிறுத்தத்தை அறிவித்தபோது இந்தியா அதனை முதலில் சந்தேகத்துடனேயே அணுகியது. இந்தியாவைச் சிக்கலில் மாட்டும் பாகிஸ்தானின் மற்றொரு சதியாக இது இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது. தற்பொழுது எதிர்பார்த்தது நடைபெற்றுவிட்டது. காஷ்மீர் பிரச்சினைக்கு உயிரூட்டுவதிலும் சர்வதேச கவனத்தை அந்த பிரச்சினையின் பால் இழுப்பதிலும் பாகிஸ்தான் மீண்டும் வெற்றி பெற்றுவிட்டது.

ஒரு வருடகாலத்துக்கு முன்னர் கார்கில் பிரதேசத்துக்குள் ஊடுருவல்காரர்களை அனுப்பி இந்தியாவை யுத்தம் ஒன்றில் சிக்க வைத்த ஜெனரல் முஷாரப்பே தற்பொழுது பாகிஸ்தானில் ஆட்சியில் இருந்து வருகிறார். எல்லைக்கு அப்பால் இருந்து இந்தியாவுக்குள் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுவதன் மூலம் இந்தியாவைப் பணிய வைக்க முடியும் என்பதில் ஜெனரல் முஷாரப்புக்கு நம்பிக்கை உண்டு.

### முத்தரப்புப் பேச்சுக்கு இந்தியா எதிர்ப்பு

ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கம் இந்தியாவுடனான பேச்சுவார்த்தையின் போது பாகிஸ்தானையும் சேர்த்துக்கொள்ள முயன்றதே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சி தோல்வி அடையவும் - அந்த இயக்கம் தாக்குதல் நிறுத்தம் அறிவிப்பை முடிவுக்குக் கொண்டு வரவும் காரணமாகும்.

பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னரே, பேச்சுக்களில் ஆராயப்படவுள்ள விடயங்கள் இந்தியாவின் அரசமைப்புக்கு உட்பட்டதாகவே இருக்க வேண்டும் என்று இந்தியா முன்நிபந்தனை விதித்தது. முன்னர் நாகாலாந்துப் பிரிவினைவாத இயக்கங்களுடன் பேச்சு நடத்தியபோதும் இதே நிபந்தனையே விதிக்கப்பட்டது. அதாவது பேச்சுவார்த்தையின் போது தனிநாட்டுக் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது என்பதே இதன் அர்த்தமாகும்.

இந்தியா முன்நிபந்தனை விதித்திருந்த போதிலும் பேச்சுக்கான ஆரம்பக் குழுக்கள் அமைக்கப்பட்டு ஆலோசனைகளும் நடத்தப்பட்டிருந்தன. கடந்த 3ஆம் திகதி முஜாஹிதீன் கொமாண்டோக்களும் இந்திய அரச பிரதிநிதிகளும் ஸ்ரீநகரில் உள்ள அரச விருந்தினர் விடுதி ஒன்றில் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

தலைமறைவு இயக்கமாக இருந்து வந்த ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கம் முதல் தடவையாக வெளியே தலைகாட்டியது. ஆனால் ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கம் பாகிஸ்தானையும் பேச்சுவார்த்தையில் சேர்க்கும் படி - அதாவது பாகிஸ்தான், இந்தியா, ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கம் ஆகியவற்றைக் கொண்ட முத்தரப்புப் பேச்சுவார்த்தையை நடத்தும்படி கோரிக்கை விடுத்ததை அடுத்து - நெருக்கடி நிலைமை ஏற்பட்டது.

ஸ்ரீநகரில் உள்ள அரச விருந்தினர் விடுதியில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்து கொண்டிருந்த சமயமே, பாகிஸ்தானில் உள்ள ஹிஸ்புல் முஜாஹிதீன் பேச்சாளர் ஒருவர் விடுத்த அறிக்கையில், முத்தரப்புப் பேச்சுக்கு இந்தியா இணக்கம் தெரிவிக்காவிட்டால் ஓகஸ்ட் 8ஆம் திகதி தாக்குதல் நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்படும் என்று அறிவித்திருந்தார்.

ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது போன்று தற்பொழுது பேச்சுவார்த்தை முயற்சி தோல்வியடைந்து ஜம்மு - காஷ்மீரில் மீண்டும் வன்முறைகள் வெடித்துள்ளன.

இந்தியாவுக்கும் ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கத்துக்கும் இடையிலான பேச்சுக்கள் இந்திய - பாக். எல்லைப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இல்லாதபடியால் பாகிஸ்தானை பேச்சுவார்த்தையில் சேர்த்துக் கொள்ளும் தேவை கிடையாது என்பது இந்தியாவின் வாதம். இந்திய உள்விவகார அமைச்சர் எல். கே.அத்வானியும் இதனையே வலியுறுத்திக் கூறியுள்ளார்.

ஏற்கனவே ஜம்மு - காஷ்மீர் முதலமைச்சர் பாருக் அப்துல்லா, ஜம்மு - காஷ்மீர் சட்டப் பேரவையில் ஜம்மு - காஷ்மீர் மாநிலத்துக்கு சுயாட்சி வழங்கும் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு தமது முயற்சிக்கு பிற மாநிலங்களின் முதலமைச்சர்களின் ஆதரவைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார். இந்தச் சுயாட்சிக் கோரிக்கையை இந்திய மத்திய அமைச்சரவை ஒருமனதாக நிராகரித்துவிட்டது. ஜம்மு - காஷ்மீர் மாநிலத்துக்கு கூடுதல் சுயாட்சி வழங்கினால் அந்த மாநிலம் காலப்போக்கில் பிரிந்து செல்லும் நிலைக்கு வழிகோலலாம் என்று இந்தியா அஞ்சுகிறது.

தற்பொழுது ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கத்தின் சமாதான முயற்சிகளும் தோல்வி கண்டிருப்பது நிலைமையை மேலும் மோசமாக்கி விட்டுள்ளது.

சமாதான முயற்சிகள் தோல்வியடைந்த நிலையிலும் ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு உறுதி கொண்டிருப்பதாக பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார். அதே சமயம் பாகிஸ்தானால் எல்லைக்கு அப்பால் இருந்து கட்டவிழ்த்து



ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கப் பிரதிநிதிகள் ஸ்ரீநகரில் உள்ள அரச விருந்தினர் விடுதியில் இந்திய அதிகாரிகளைச் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம். ஹிஸ்புல் முஜாஹிதீன் உறுப்பினர்களில் இருவர் படத்துக்கு 'போஸ்' கொடுத்த போது தமது முகத்தை துணியால் மூடிக்கொண்டனர்.

விடப்படும் பயங்கரவாதத்துக்கு எதிராக தொடர்ந்து போராடப்போவதாகவும் சுமுகமான சூழ்நிலை ஒன்று உருவாகும்வரை பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தைக்கே இடமில்லை என்றும் இந்தியத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. காஷ்மீர் தொடர்ந்து இரத்தக்கறை படிந்த மாநிலமாக இருக்கமுடியாது என்பது இந்தியாவின் கொள்கை. ஆனால் பாகிஸ்தானால் கட்டவிழ்த்து விடப்படும் பயங்கரவாதத்திற்கு சரணடைந்து போக இந்தியா தயார் இல்லை.

### பாகிஸ்தானில் அடக்குமுறை

காஷ்மீர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முடியும் என்பதில் முன்னாள் பிரதமர்களான பெனாஸிர் பூட்டோ, நவாஸ் ஷெரீப் ஆகியோர் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் ஸியா - உல் - ஹக்கின் பாதையில் தற்பொழுது பாகிஸ்தானை இட்டுச் செல்லும் ஜெனரல் முஷரப் யுத்தம் மூலமான தீர்விலேயே அதிக நம்பிக்கை கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.


ஜெனரல் முஷாரப் தற்பொழுது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் காரணமாக பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீப்பினதும் பெனாஸிர் பூட்டோவினதும் அரசியல் எதிர்காலம் அஸ்தமிக்கும் நிலைக்கு வந்து விட்டது. விமானக் கடத்தல் உட்பட பயங்கரவாத குற்றங்களுக்காக கடந்த ஏப்ரல் மாதம் இரு ஆயுள் தண்டனைகள் பெற்று நவாஸ்ஷெரீப் சிறையில் இருந்து வருகிறார். பெனாஸிர் பூட்டோவுக்கும் அவரது கணவர் ஆசிப் அலி சர்தாரிக்கும் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பெனாஸிர் பூட்டோ தற்போது பிரிட்டனில் தங்கி உள்ளார். நாடு திரும்பினால் அவர் கைதாகிச் சிறையில் தள்ளப்படுவார். அவரது கணவர் ஆசிப் அலி சர்தாரி இந்தியாவில் சிறை வைக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரதும் அரசியலுக்கு இறுதி ஆப்பு வைப்பதற்காக ஜெனரல் முஷாரப் அவசரச்சட்டம் ஒன்றைக் கடந்த வாரம் பிறப்பித்தார். நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு தடை விதிக்கப்பட்டவர்கள் அல்லது அரசின் பதவிப் பொறுப்புக்களை ஏற்க தகுதியற்றவர்களாக அறிவிக்கப்பட்டவர்கள் அரசியல் கட்சிகளில் பதவி எதனையும் வகிக்கக்கூடாது என்று இந்த அவசரச் சட்டம் வலியுறுத்துகிறது.

மேலும் தார்மீக ஒழுக்க நெறிகளை மீறியோர், பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை மீறியோர், பொது அமைதிக்கு ஊறுவிளைவித்ததாக நீதிமன்றத்தில் தண்டனை பெற்றவர்கள் இந்த புதிய அவசர சட்டத்தின் பிரகாரம் அரசியல் கட்சிகளில் பதவி எதனையும் வகிக்க முடியாது.

தற்போது பாகிஸ்தானில் ஜெனரல் முஷாரப்பின் ஆட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஒன்று சேர்க்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியும் பெனாஸிர் பூட்டோவின் மக்கள் கட்சியும் ஜனநாயக ஆதரவுக் கூட்டணி ஒன்றை அமைப்பதற்காகவும், இராணுவ ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவும் இணைந்து செயலாற்ற முன்வந்துள்ளன.

இப்படியான தருணத்தில் இந்த இருகட்சிகளையும் நசுக்க ஜெனரல் முஷாரப் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள், ஜம்மு - காஷ்மீரில் மீண்டும் வன்முறைகள் வெடித்து சமாதான முயற்சிகள் பின்தள்ளப்பட்டிருப்பது ஆகியவை காஷ்மீர் பிரச்சினையில் அமைதித் தீர்வை மீண்டும் பல ஆண்டுகளுக்குப் பின் தள்ளிவிட்டுள்ளன. ★



ஜம்மு - காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் இந்திய காவல் படை வீரர் ஒருவர் தயார் நிலையில் உள்ள காட்சி.

# ஆசிரியகலாசாலைகளுக்கு மேலும் 182 பேர் தெரிவு

வலி. வடக்கு, ஓக. 15

பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கு மேலும் 182 ஆசிரிய மாண வர்களை அனுமதிப்பதற்கான பட்டியல் இங்கு எடுத்து வரப் பட்டுள்ளது.

மேலதிக கல்விப் பணிப்பா ளர் கலாநிதி ந. தணிகா சலம்பிள்ளை இப்பட்டியலை கொழும்பில் இருந்து எடுத்து வந்துள்ளார்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு 67 ஆசிரிய மாணவர்களின் பெயர்ப்பட்டி யலும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு 115 ஆசிரிய மாணவர்களின் பெயர்ப் பட்டியலும் எடுத்து வரப்பட்டுள்ளன.

இப்பட்டியல்களில் இடம் பெற்றுள்ள ஆசிரிய மாணவர் களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த தவணை ஆரம்பிப்ப தற்கு முன்னர் நடைபெற உரிய நடவடிக்கைகள் கல்வித் திணைக்களத்தினால் மேற் கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-86)

# இன்று நடப்பவை

நெடுந்தீவு குமுதினிப் படகு படு கொலையின் 15 ஆவது நினைவு தினத்தை முன் னிட்டு இன்று செவ்வாய்க் கிழமை மேற்படி படகுச் சம்ப வத்தில் பலியானவர்களுக் காகவும் காயமுற்றவர்களுக் காகவும் ஆத்ம சாந்தியும் மன அமைதியும் வேண்டி இங் குள்ள இந்து, கத்தோலிக்க ஆலயங்களில் விசேட பிரார்த் தனைகள் நடைபெறும்.

(க-111)

★ ★ ★

ஆரம்பநெறி ஆசிரியர் தெரி வில் பாதிக்கப்பட்டோர் சங்க அங்கத்தவர்களுக்கான கூட்டம் இன்று செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல் லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் சங்கத்தில் பதிவு களை மேற்கொண்ட பழைய புதிய அங்கத்தவர்களையு இது வரை பதிவுகளை மேற் கொள்ளத் தவறியவர்களை யும் இன்றைய தினம் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் பா. மணிவண்ணன் கேட்டுள்ளார்.

(இ-9)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 15

அண்மையில் கலாபூஷணம் விருது பெற்ற இணுவில் நாதஸ்வர வித்துவான் கே. ஆர். சுந்தரமூர்த்தியின் சேவையைப் பாராட்டும் விழா இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணிக்குக் கோண்டாவில், இணுவில் காரைக்கால் சிவன் கோயிலில் இடம்பெறவுள் ளது.

இந்த நிகழ்வில் பிரம்மஸ்ரீ ச. ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள் ஆசியுரை வழங்குவார். தொடர்ந்து கோண்டா விலைச் சேர்ந்த மூத்த பத் திரிகையாளர் செல்லப்பா நடராசா நல்லூர் பலநோக் குக் கூட்டுறவுச்சங்கத் தலை வர் பெ. கனகசபாபதி, ஓய்வு பெற்ற அதிபர், சைவப்புல வர் சு. செல்லத்துரை. ஆசி ரியமணி அ. பஞ்சாட்சரம், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

இதனைத் தொடர்ந்து இணுவில் பொதுமக்கள் சார்பில் கே. ஆர். சுந்தர மூர்த்திக்கு பொன்னாடை போர்த்தியும், பொற் பதக்கம் அணிவித்தும் அவர் கௌரவிக்கப்படுவார்.

(இ-9)

## விவசாயக் குளம் புனரமைப்பு

காரைநகர், ஓக. 15

தேசிய இளைஞர் சேவை கள் மன்றத்தின் அனுசரணை யுடன் காரைநகர் சத்தி ரத்தை கலட்டி விவசாயக் குளத்தைப் புனரமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

காரைநகர்ப் பகுதியைச் சேர்ந்த 30 இற்கும் மேற் பட்ட இளைஞர் யுவதிகள் இந்தக் குளத்தைப் புனரமைக் கும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படா மல் தூர்ந்து போகும் நிலை யில் இந்தக் குளம் ஆழமாக் கப்பட்டு புனரமைக்கப்படு வதால் அப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான விவசாயி கள் நன்மை அடைய முடியும் என்று நம்பப்படுகிறது.

(இ-73)

## பொதுசன உதவிப் பணம்

யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் பொது சன மாதாந்த உதவிப் பணம் மற்றும் காச நோய், புற்று நோய், தொழுநோய் என்ப வற்றிற்கான உதவிப்பணம் பெற்றுக் கொள்பவர்களுக் கான ஓகஸ்ட் மாதக்கொடுப் பனவுகள் தபால் அலுவல கங்களுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளன. (க—30)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 15

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவமகாசபை ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 5 மணிமுதல் 6 மணிவரை கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ நித்தியானந்தசர்மா 'மகா பாரதம்' பற்றி வழங்கி வரும் இசைச் சொற்பொழிவில் இன்று செவ்வாய்க்கிழமை 'பீஷ்மர் சபதம்' இடம் பெறும்.

(க-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 15

வடபிராந்திய இந்துப் பேரவை அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத் தில் 2பி.ப மணிமுதல் நடத்தி வரும் சொற்பொழிவில் இன்று செவ்வாய்க்கிழமை சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் 'வாசகரும் வாச கமும்' எனும் தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

(க-30)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஓக. 15

புனித மரியாளின் விண் ணேற்பு விழா இன்று செவ் வாய்க்கிழமை காலை யாழ். புனித மரியாள் பேராலயத் தில் நடைபெறும்.

பூசை வழிபாடும், திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் ஆலய பங்குத்தந்தை அருட்திரு. ஏ. சி. கிறிஸ்ரோபர் அடிகள் தலைமையில் இடம்பெறவுள் ளன. (க-30)

★ ★ ★

வட்டுக்கோட்டை அரசடி வீதி விளானை ஸ்ரீ வைரவர் ஆலயத்தில் இன்று காலை 8 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும் (க-30)

★ ★ ★

நீர்வேலி வாய்க்கால் தரவைஸ்ரீ பிள்ளையார் ஆலய மகோற்சவத்தின் தேர்த்திரு விழா இன்று செவ்வாய்க கிழமை காலையும், தீர்த் தோற்சவம் நாளை காலையு இடம்பெறவுள்ளன.

## நாளை

வேலணை, ஓக. 15

வேலணை கால்நடை வைத்திய அலுவலகத்தில் கால்நடைகளுக்கு செயற்கை முறையில் சினைப்படுத்தல் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடை பெற ஏற்பாடாகியுள்ளது.

வேலணைப்பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு இன்னும் ஓரிரு வாரங்களில் செயற்கை முறையில் சினைப்படுத்தும் தொழிற்பாடு ஆரம்பிக்க இருப்பதால் அதற்கு முன் னோடியாகவே இக் கருத்த ரங்கு ஒழுங்கு செய்யப்பட்டி ருப்பதாக அப்பகுதி கால் நடை வைத்தியர் தெரிவித் துள்ளார்.

(க-167)

## முன்பள்ளிகளுக்கு ஒரு தொகுதி சிறுவர் கதை நூல்கள்

### 'யுனிசெவ்' வழங்கும்

யாழ். மாவட்டத்தில் உள்ள முன்பள்ளிகளுக்கு ஒரு தொகுதி சிறுவர் நூல்களை 'யுனிசெவ்' நிறுவனம் நன் கொடையாக வழங்கவுள்ளது

உள்ளூராட்சித் திணைக் களத்தின் ஊடாக இந்த நூல் கள் முன்பள்ளி ஆசிரியர்களி டம் கையளிக்கப்படவுள்ளன.

இது தொடர்பான விவரங் கள் உள்ளூராட்சித் திணைக் களத்தினால் பிரதேச செய லக பிரிவு ரீதியாக திரட்டப் பட்டுவருகிறது.

'கெட்டிக்கார முயலார்' 'கன்றுக்குட்டியார்' 'நெய்க் குடம்' 'விளையாட்டுச் சந்தை' 'ஒற்றைச்செருப்பு' 'பறவை இராசாவுக்குத்தேர்' 'முரளியின் பலூன்' ஆகிய தலைப்புகளிலான சிறுவர் நூல்களே வழங்கப்படவுள் ளன. (ஐ-5-10)

## ஜெயப்பூர் அலுவலகம் இடம் மாற்றம்

சுண்டுக்குளியில் இருந்து இடம்பெயர்ந்து தொல்புரத் தில் இயங்கிவந்த யாழ். ஜெயப்பூர் செயற்கைக் கால் திட்டப் பணிமனை கடந்த திங்கட்கிழமை முதல் இணு வில் வைத்தியசாலையின் கட்டடத் தொகுதி ஒன்றில் இயங்கி வருகின்றது (க-30)

## சமுர்த்தி நியமனத்துக்கான...

(4 ஆம் பக்கத் தொடர்)

கிறிஸ்தோபர் அனோசியா — 10 ஆம் வட்டாரம்.

### வேலணை

சமுர்த்தி ஊக்குவிப்பாளர் போதுரு றுபினாமேரி — 3ம் வட்டாரம், மண்டதீவு, உமா பதி சசிதரா —2ம் வட்டாரம் மண்டதீவு. தேவசகாயம் தவ நாயகம் — 1ம் வட்டாரம், வேலணை கிழக்கு, கந்தையா பிரேமலாதேவி— 6ம் வட்டா ரம், வேலணை மேற்கு. இரா ஜகுலசிங்கம் சுதர்சினி —4ம் வட்டாரம், வேலணை, கந்த சாமி பஞ்சலிங்கம்—12ம் வட் டாரம், புங்குடுதீவு, அன்ரனி வேதநாயகம்—2ம் வட்டாரம் சரவணை, இ. அன்பரசி— 7ம் வட்டாரம், புங்குடுதீவு. பத்மநாதன் பங்கயற்செல்வி —12ம் வட்டாரம், புங்குடு தீவு, வைத்திலிங்கம் பகீர தன்—12ம் வட்டாரம், புங் குடுதீவு. ஓங்காரநாதன் கஜேந்திரன்—12ம்வட்டாரம் புங்குடுதீவு. க. புஸ்பாஞ்சலி —4ம் வட்டாரம், புங்குடுதீவு, வேணு கலாரஞ்சினி — 4ம் வட்டாரம், புங்குடுதீவு, கந்த சாமி பிரேமினி—3ம் வட்டா ரம், புங்குடுதீவு, கருணா னந்தசிவம் அஜந்தன் —3ம் வட்டாரம், புங்குடுதீவு, சுபாகரன் ஜெயகலா — புங் குடுதீவு, சௌந்தரராஜன் ராதிகா — 4 ஆம் வட்டாரம் புங்குடுதீவு, வைரமுத்து சுதாகரன் — 1ஆம் வட்டா ரம், நயினாதீவு.

சமுர்த்தி வங்கியாளர்— விஸ்வலிங்கம் முரளிதாஸ்— வேலணை, ஆனந்தவராஜா காண்டீபன்— 4ம் வட்டாரம். வேலணை கிழக்கு.

சமுர்த்தி யூனியன்— வர்னகுலசிங்கம் கிரிதரன்— 2ம் வட்டாரம், வேலணை, கிருஷ்ணபிள்ளை மல்லிகா தேவி— 8ம் வட்டாரம், புங்குடுதீவு, கங்கைவேணியன் சந்திரசோதி— 6ம் வட்டா ரம், வேலணை, கோபல கிருஷ்ணன் பிரியதர்சினி— 6ம் வட்டாரம், வேலணை, பிரான்சிஸ் மரிய சுசில்ட்டா— 3ம் வட்டாரம், அல்லைப் பிட்டி, குற்றாலம் ஜெயகாந் தன்— 1ம் வட்டாரம் நயினா தீவு. இரவுப்பிள்ளை தேவ தாஸ் 2ம் வட்டாரம், புங்குடு தீவு.

### ஊர்காவற்றுறை

சமுர்த்தி ஊக்குவிப்பாளர் —சிவப்பிரகாசம் பரமேஸ்வரி — 2ம் வட்டாரம், அனலை தீவு, முருகேசு வாகினி— 6ம் வட்டாரம், அனலைதீவு, பஞ் சாட்சரம் இராதாகிருஷ்ணன் —மணற்பிட்டி காரைநகர், வேலாயுதம் லோகேஸ்வரி — விலானை, காரைநகர், விஜய பாஸ்கர் நிசாந்தினி — ஊர் காவற்றுறை, இரவீந்திரன் இம்மாகுலேற்—மண்குழிவீதி, ஊர்காவற்றுறை, நாகநாதி சரஸ்வதி—கரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறை, இரவீந்தி ரன் அன்ரனற் யொபித்தா —கரம்பன் தெற்கு. ஊர் காவற்றுறை, கனகலிங்கம் வைகுந்தவாசன் — நாரந் தனை வடக்கு, நா. குகதாஸ் —நாரந்தனை வடக்கு, மேரி ஜோசப் அனிற் சோதிமலர் —நாரந்தனை வடக்கு. இ. மேரி றபேக்கா—நாரந்தனை, கேதீஸ்வரன் நானேஸ்வரன்— புளியங்கூடல், ஞானப்பிர காசம் விகோரி— சின்னமடு, சரவணை

சமுர்த்தி வங்கியாளர் — ஆண்டி சிதம்பரநாதன் — பொன்னம்பலம் வீதி, காரை நகர், நடராசா பாரதி — மந்திபுலம், காரைநகர்.

சமுர்த்தி யூனியன் — ஜெயந்தன் கார்மிலா — சுரு வில் வீதி, ஊர்காவற்றுறை, சிவகுருநாதன் சிவனேஸ்வரி —பொன்னாவளை, களபூமி, காரைநகர், வீரபாகு கலை மகள் — 5 ஆம் வட்டாரம், அனலைதீவு, கோபால பிள்ளை ஜெகதீஸ்குமார் — நாரந்தனை கிழக்கு, ஊர்கா வற்றுறை, விக்னேஸ்வரன் புஸ்பராஜி — தம்பாட்டி, நவலிங்கம் வித்தியா — கரம் பன் மேற்கு, ஊர்காவற் றுறை.

★

## விவரங்களைப் பதியக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 15

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கீழ் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியா லயத்தில் ஆங்கிலப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டவர் கள் எதிர்வரும்20ஆம்திகதிக்கு முன் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் இயங்கும் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் தமது விவரங்களைப் பதியு மாறு இளைஞர் சேவை அதி காரி எம். வரதராஜன் கேட் டுள்ளார். (ஐ-க-185)

## தண்ணீர்த் தாங்கி சேதம்

யாழ். போதனா வைத் தியசாலை ஆய்வுகூடப் பகு திக்கு நீர் விநியோகம் செய்வ தற்காக பாவனையில் இருந்து வந்த தண்ணீர்த் தாங்கி திடீரெனச் சாய்ந்து விழுந்து சேதமடைந்தது. இதனால் ஆய்வுகூட வேலைகள் சில மணிநேரம் ஸ்தம்பிதமடைந் தன.

இதனை அடுத்து அவசர அவ சரமாக வேறு பிரிவில் இருந்து 24 மணிநேர நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து ஆய்வுகூடம் வழமைபோல செயற்பட ஆரம்பித்தது. (ஐ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்தியமும்



### திருமதி செல்லம்மா கிட்ணர்

மலர்வு 22-01-1936 — உதிர்வு 16-07-2000

அன்பின் திருவுருவாய், அமைதியின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், குடும்பத்தின் குலவிளக்காய், ஊர் புகழும் உத்தமியாய் மாண்புடன் வாழ்ந்து எமக்கு வழிகாட்டிய அன்புத் தெய்வமே!

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

'துவாரகை',
வரணி வடக்கு,
வரணி.

(77273)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

யாழ். கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த முப்பத்தைந்து வயது நிரம்பப் பெற்ற, நற்குணம்மிக்க, அரச உத்தியோகம் பார்க்கும், கண்பார்வை அற்ற பட்டதாரி மணமகனுக்கு அடக்கமும் பண்பும் நிறையப் பெற்ற மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு: விளம்பர இல. 1076, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (77294)

## பொருளியல்

2000 A/L பரீட்சையில் 50 இற்கு கூடிய புள்ளிகளை நடைமுறை விடயங்கள் II நூல் பெற வைத்தது. 2001 A/L பிரிவுக்கு நடைபெறவுள்ள தவணைப் பரீட்சைக்கு பயனுள்ள நூலான பொதுப் பொருளாதாரம் மற்றும் பணம், சர்வதேச வர்த்தகம், வர்த்தகமாற்றுவீதம், அபிவிருத்திக் கொள்கை, நடைமுறைவிடயம் II போன்றன யாழ்ப்பாணம், நெல்லியடி, சுன்னாகத்தில் விற்பனையாகின்றன. ஆசிரியர்: வே. கருணாகரன். (77271)

## விற்பனைக்கு

திருமந்திரம், திருவாசகம், திருக்குறள், திருஅருட்பா, தாயுமானார் பாடல், நற்சிந்தனை, இன்னும் தெய்வீக நூல்கள் பல இருக்கின்றன. தொடர்பு: 135, சிவன் கோயில் முன்பாக, நல்லூர், யாழ்ப்பாணம். (77295)

YAMAHA MATE-50 கறுப்பு நிற காண்டில், பிளற்நம் மொடல் சைனா 12 HP எஞ்சினும், 6 KV செய்த டைனமோவும் விற்பனைக்கு உண்டு. திரு. இராசலிங்கம், 109, சட்டநாதர் வீதி, நல்லூர். (77296)

## கடைவாடகைக்கு

சுன்னாகம் பழைய பொலீஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள கடை ஒன்று வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இ. இராசரத்தினம், நாகேஸ்வரி வித்தியா சாலை வீதி, சுன்னாகம். (77298)

## ஏற்பு வலியால் மரணம்

யாழ்ப்பாணம்,ஓக.15

ஏற்புவலியின் தாக்கத்திற்குள்ளாகி கடந்த 8ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் இருநாள்களின் பின் கடந்த 10ஆம் திகதி அங்கு மரணமானார்.

மோட்டார் மெக்கானிக்கான நெல்லியடியைச் சேர்ந்த கந்தசாமி தங்கராசா (வயது67) என்பவரே இச்சம்பவத்தில் மரணமானவராவார்.

மோட்டார் மெக்கானிக்கான இவர் பலதடவைகள் சிறுகாயங்களுக்குள்ளான போதிலும் அதற்குரிய ஏற்புத்தடை ஊசிமருந்தைப் போடத் தவறியமையினாலேயே ஏற்புவலியின் தாக்கத்திற்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

## நல்லூரில் அன்னதானம்

நல்லூர்,ஓக.15

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் பத்தாவது நாளான நேற்று திங்கட்கிழமை முதல் உற்சவம் முடிவடையும் 30 ஆம் திகதி புதன்கிழமைவரை நல்லூர் வீதியில் அமைந்துள்ள துர்க்கா மணிமண்டபத்தில் அடியார்களின் வசதியைக் கருத்தில் கொண்டு தினமும் நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ-117)

## ஆசிரியருக்கு விசேட படி

தென்மராட்சி,ஓக.15

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு ஓகஸ்ட் மாதச் சம்பளத்துடன் விசேட படி 600 ரூபா வழங்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்தார்.

விசேட படி வழங்குவதற்கான சுற்றறிக்கை வலய அலுவலகத்திற்கு கிடைத்துள்ளதால் ஓகஸ்ட் மாத சம்பளத்துடன் விசேட படியினை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்தார். (ஐ-117)

# இடம்பெயர்ந்தோருக்கு உணவு உற்பத்தித் திட்டம்

மூளாய்,ஓக.15

அனர்த்தங்களால இடம்பெயர்ந்த மக்களின் நலன்கருதி வலிகாமம் மேற்குப் பகுதிகளில் விவசாய உதவித்திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இவ் விவசாய உதவித்திட்டத்தை நடைமுறைப்படுத்தவதற்கு சர்வதேச 'கெயர்' நிறுவனம் முன் வந்துள்ளது.

எதிர்வரும் பெரும்போகத்தின் போது இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் படி மேட்டுநில விவசாயச் செய்கையாக மரக்கறி மற்றும் அவரை இனப்பயிர்ச்செய்கை ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. இதற்கான முன்னேற்பாடுகளை வலி.மேற்கு பிரதேச செயலகம் மேற்கொண்டுவருகிறது.(ஐ-99)

உ

இணுவில், நாதஸ்வர மேதை

கலாபூஷணம்

கே. ஆர். சுந்தரமூர்த்தி அவர்களுக்கு

## பாராட்டு விழா

* இடம்: **காரைக்கால் சிவன் தேவஸ்தானம்**

* காலம்: இன்று(15-08-2000)செவ்வாய் பிற்பகல 3.30 மணி (திருக்கல்யாண உற்சவ தினம்)

* ஆசியுரை: பிரம்மஸ்ரீ ச. ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள்

* பாராட்டுரை:

**திரு. செல்லப்பா நடராசா** *(மூத்த பத்திரிகையாளர், கோண்டாவில்.)*

**திரு. பெ. கனகசபாபதி** *(தலைவர், ப. நோ. கூ. சங்கம், நல்லூர்.)*

**சைவப்புலவர் சு. செல்லத்துரை** *(ஓய்வுபெற்ற அதிபர், இளவாலை.)*

**ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்** *(காரியதரிசி, பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபை, உரும்பிராய்.)*

**செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்** *(ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.)*

நாதஸ்வர மேதை

கலாபூஷணம் கே. ஆர். சுந்தரமூர்த்தி அவர்கள் இணுவில் பொதுமக்கள் சார்பில் பொன்னாடை போர்த்தியும், பூமாலை சூட்டியும், பொற்பதக்கம் அளித்தும் கௌரவிக்கப்படுவார்.

* கௌரவிப்பவர்கள்:

**கலாநிதி சி. சிவலிங்கராசா** *(தமிழ்த்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்.)*

**திரு. செ. மதியாபரணம்** *(வளர்மதி ரெக்ஸ்ரைல்.)*

**திரு. சோ. லோகேந்திரன** *(காரைக்கால் தேவஸ்தானம்.)*

**திரு. த. கந்தசாமி** *(பெஷன் ஹவுஸ்.)*

ஏற்புரை: **கலாபூஷணம் கே. ஆர். சுந்தரமூர்த்தி**

நன்றியுரை: **திரு. செ. இலகுநாதன்** *(அன்னதானசபை, காரைக்கால் சிவன்கோயில்.)*

**அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.**

**காரைக்கால் சிவன் தேவஸ்தானம்.**

**இணுவில், கோண்டாவில்.** (77299)

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி பராசக்தி விஜயரட்ணம்**

எமது சக பயிற்சி ஆசிரியையாகிய

திருமதி பரமானந்தம் சிவசக்தி

**அவர்களின் அன்புத் தாயார்**

திருமதி பராசக்தி விஜயரட்ணம் அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**ஆங்கில மன்றம், பலாலி ஆசிரியர் கலாசாலை.**

(77301)

## 37 ஆம் நாள் ஞாபகார்த்த ஆராதனை

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்."

**அன்னை மடியில் 14 - 12 - 1932**



**ஆண்டவன் அடியில் 10 - 07 - 2000**

அமரர்

**தம்பிராசா திருநாவுக்கரசு (நாவேந்தன்)**

(ஓய்வுபெற்ற அதிபர், பிரபல எழுத்தாளர், முன்னாள் பிரதி மேயர்)

அவர்களின் 37 ஆம் நாள் ஞாபகார்த்த ஆராதனை இன்று (15-08-2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு (புதிய நேரம்) ஏழாலை வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இவ்வாராதனையிலும அதனைத் தொடர்ந்து நடைபெறும் தேநீர் விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவினால் துயருறும்: **மனைவி, மக்கள்.**

*'மலரகம்' ஏழாலை வடக்கு, ஏழாலை.*

(C/12496)

# நேர்முகப் பரீட்சை

யாழ். போதனா வைத்திய சாலையில் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் பழைய வெளிநோயாளர் பிரிவுக்கு முன்னால் அமைந்துள்ள சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்புக் காரியாலயத்தில் நடைபெறும்.

நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் நற்சான்றிதழ்களுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க)

## G.C.E. O/L மாணவர்களுக்கு!!!

**வெளிவந்துவிட்டது**

***கணிதப் பயிற்சி*** - (விடைகளுடன்)

42 ஆம், 45 ஆம் இலக்க மாதிரி வினாத்தாள்களைக் கொண்டது.

ஆக்கம்: **பா. கிருபாகரன்** (SP. Trd. Maths, B.A.Ceylon.)

கிடைக்குமிடம்: **பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்.**

தரம்10 மாணவர்களுக்கான கணிதப் பயிற்சி விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.

(77302)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

வரணி வடக்கைச் சேர்ந்தவரும், தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளருமான, திருமதி சிறீசந்திரவதனா யோகராசாவின்

**அன்புத் தாயார்**

**அமரர் கிட்டிணர் செல்லம்மா**

கடந்த 16-07-2000 ஆம் திகதி காலமாகியதையிட்டு, எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம்.*

*பிரதேச செயலகம், தென்மராட்சி.*

(C/12498)

## நெஞ்சம் கலங்கி நிற்கும் 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய சங்கீத ஆசிரியர்

திரு. கி. பரமேஸ்வரன்

**அவர்களின் அன்புத் தாயார்**

**திருமதி கிட்டிணர் செல்லம்மா**

அவர்கள் 16-07-2000 அன்று காலமாகியதையிட்டு துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

*யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., கொடிகாமம்.*

(77304)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் வேலும்மயிலும் (சிவப்பிரகாசம்)

சந்தைவீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்த ஆறுமுகம் வேலும்மயிலும் (சிவப்பிரகாசம்) நேற்று (14-08-2000) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற அன்னபூரணியின் அன்புச் சகோதரனும், சோமசுந்தரத்தின் மைத்துனரும், விமலாதேவி, நாகச்சந்திரன், விமலச்சந்திரன் (கிளி) ஆகியோரின் மாமனாரும், சச்சிதானந்தன், குமுதா ஆகியோரின் பெரிய தந்தையும், அபிநயா, ஐங்கரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:

**சோ. விமலச்சந்திரன** (கிளி).

பொன். சோமசுந்தரம் நகைமாடம் நவாலி.

சந்தைவீதி, உடுப்பிட்டி.

(77303)

## இராமலிங்கம் சுந்தரலிங்கம்

(Retd. Postal Examiner)

சுன்னாகம் பழைய பொலீஸ் நிலையத்தடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சுந்தரலிங்கம் 08-08-2000 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - தங்கச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியினரின் மருமகனும், சுந்தரகுமாரி, சுகுமாரி, ஜெயக்குமாரி, யசோதரகுமாரி ஆகியோரது அன்புத் தந்தையும், பிறேம்குமார், சோதிநாதன், ஜீவகுமார், சிறி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11-08-2000 வெள்ளிக்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**இ. இராசரத்தினம்** (சகோதரன்)

நாகேஸ்வரி வித்தியாசாலை வீதி, சுன்னாகம்.

(77297)

# பொதுமக்களுடன் நல்லுறவைப் பேணி கிளைகளின் பாதுகாப்பை உறுதி செய்க!

## கூ.சங்க முகாமையாளர்களுக்கு பொலீஸார் அறிவுறுத்தல்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளர்கள் பொது மக்களுடன் நல்ல அணுகுமுறையைப் பேணுவதன் மூலம் வியாபாரத்தைப் பெருக்கலாம். அத்துடன் கிளைகளின் பாதுகாப்பையும் அதன் மூலம் உறுதிப்படுத்த முடியும்.

யாழ். பொலீஸ் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளை முகாமையாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்றில் யாழ். உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டுறவுச் சங்கக் கிளைகள் பல அண்மைக்காலத்தில் உடைக்கப்பட்டு பொருள்கள் சூறையாடப்பட்டமை குறித்தும் -

இவற்றைத் தடுப்பதற்கு கிளை முகாமையாளர்கள எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் -

உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் விரிவாகக் கூட்டத்தில் எடுத்துக்கூறினார்.

★ கிளை முகாமையாளருக்கு நம்பிக்கையான ஒருவரே கிளையின் காவலாளியாகச் செயற்படவேண்டும்.

★ சில கிளைகளில் பொருள்கள் களவு போவதற்குக் கிளை முகாமையாளர்களும் உடந்தையாகச் செயற்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

★ கிளைக் கட்டடங்களைக் களஞ்சியங்களை உரிய முறையில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

★ பொலீஸார் கிளைகளை விரைவில் பார்வையிடுவார்கள். அத்துடன் கிளைக்கட்டட பாதுகாப்பு வசதிகள், காவலாளியின் கடமை போன்றவற்றையும் பொலீஸா அவதானித்துச் செல்வார்கள்.

இவ்வாறு உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் கிளை முகாமையாளர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார். (ஐ-17)

# அண்மைய அசம்பாவிதங்களின் போது யாழ்.கூட்டுறவுச் சங்கத்துக்கு ஒன்பது லட்சம் ரூபா இழப்பு!

அரியாலை,ஒக.15

யாழ். பிரதேச செயலர் பிரிவில் கடந்த மே மாதம் முதல் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை மற்றும் மக்கள் இடப்பெயர்வு போன்றவற்றினால் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சுமார் 8 லட்சத்து 78 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்த சூழ்நிலை மற்றும் இடம்பெயர்வைப் பயன்படுத்தி சங்கத்தின் கிளைகள் பல உடைக்கப்பட்டு பெறுமதிவாய்ந்த பொருள்கள களவாடப்பட்டதாலேயே இந்த நஷ்டம் சங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நஷ்டம் சங்க வளர்ச்சிக்குப் பெரும் இழப்பாக இருப்பதால் இதை ஈடுசெய்ய நஷ்டஈடு தருமாறு சங்கத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் யாழ். அரச அதிபர் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. (ஐ-17)

# வடக்கு - கிழக்குக்கு வெளியே அரசுடன் இணைந்து போட்டி

## முஸ்லிம் காங்கிரஸ் முடிவு

கொழும்பு,ஒக.15

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த பல்வேறுபட்ட கோரிக்கைகளை நிறைவேற்றித்தருவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்துள்ளதாகவும். இதன் காரணமாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் அது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்தே போட்டியிடும் எனவும் தெரியவருகிறது.

எனினும், வடக்கு - கிழக்கில் முஸ்லீம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமுமில்லை எனவும் வடக்கு - கிழக்குக்கு வெளியே பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து செயற்படவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக முஸ்லீம் காங்கிரஸின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

முஸ்லீம் காங்கிரஸின் அரசியல் அதிஉயர்பீட உறுப்பினர்கள், கட்சித்தலைவர் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை அலரிமாளிகையில் ஜனாதிபதி திருமதி குமாரதுங்கவைச் சந்தித்து சுமார் 6 மணித்தியாலங்கள் உரையாடியதாக முஸ்லிம் காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் இரண்டு கட்சிகளும் எந்தவிதமாகச் செயற்படுவது என்பது குறித்து நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டதாகவும் தமது கோரிக்கைகள் பலவற்றுக்கு இதுவரை தீர்வு கிட்டவில்லை என முஸ்லிம் காங்கிரஸ் குழு ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியதாகவும் அவற்றுக்கு விரைவான தீர்வைப் பெற்றுத்தருவதற்கு ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பின் பெறுபேறுகள் தொடர்பாக இன்று செவ்வாய்க் கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாம் மண்டபத்தில் நடைபெறவுள்ள செயற்குழுக் கூட்டத்தில் அமைச்சர் அஷ்ரப் தெளிவுபடுத்தவிருப்பதாகவும், இன்றைய சந்திப்பின்போது தேர்தல் தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஐ-6)

# சட்டவிரோதமாக மணல் அள்ளிய இருவர் பொலீஸாரால் கைது!

நெல்லியடி ஒக.15

சட்டவிரோதமான வகையில் உழவு இயந்திரங்களில் மணல் ஏற்றிய இருவரை 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 30 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் செல்ல பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ச.ஏகநாதன் உத்தரவிட்டார்.

புலோலி வல்லிபுர குறிச்சிப் பகுதியில் மணலை சட்டவிரோதமான வகையில் இரு உழவு இயந்திரங்களில் ஏற்றிய குற்றத்துக்காக பருத்தித்துறைப் பொலீஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட துன்னாலை மேற்கு கரவெட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சந்திரலிங்கம் (வயது 32), துன்னாலைகரவெட்டியைச் சேர்ந்த அமிர்தலிங்கம் மதன் (வயது 28) ஆகிய இருவரையும் பொலீஸார் பருத்தித் துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவர்களை தலா 2 ஆயிரத்து 500 ரூபா காசுப் பிணையிலும் தலா 15 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் செல்லுமாறு உத்தரவிட்ட நீதிவான் இவ்வழக்கு விசாரணையை இம்மாதம் 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஐ-109)

# பாலியல் வல்லுறவு முயற்சி: தப்பியோடிய சிப்பாய் கைது!

திருகோணமலை,ஒக.15

கந்தளாய் வென்றாசன்புரத்தில் வசிக்கும் திருமணமான பெண்ணொருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முனைந்ததாகக் கூறப்படும் - இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய - சிப்பாய் ஒருவரைக் கந்தளாய் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான எச்.ஜீ.விஜேஸேன என்ற அந்த சிப்பாய் கணவனுடன் நித்திரையில் இருந்த பெண்ணொருவரைக் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முனைந்தார் என பொலீஸார் தெரிவித்தனர்.

பிரஸ்தாப சிப்பாய் திருகோணமலை நீதிவான் பீ.சொர்ணராஜா முன் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஐ-3)

## கொழும்பில் ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு பாலத்துறைப் பகுதியில் கடந்த சனி இரவு வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த இருவர் மீது இனந்தெரியாத குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்; மற்றவர் படுகாயமடைந்தார்.

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் எண்மர் கொண்ட குழுவே இத் தாக்குதலை நடத்தியிருப்பதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலீஸார் கூறினர்.

காயமடைந்தவர் கொழும்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## வில்லிசை நிகழ்ச்சி

இலங்கை ரூபவாஹினி ஒளிபரப்புச் சேவையின் முதல் அலைவரிசையில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 7.00 மணிக்கு நடைபெறும் கலையரங்க நிகழ்வில் அமரர் மகாகவியின் 'கண்மணியாள்காதை' வில்லிசை இடம்பெறும்.

இரா.ரவீந்திரனின் தயாரிப்பில் சோக்கல்லோ சண்முகம் குழுவினர் வில்லிசையை வழங்குவர். (ஐ-க)

## மோட்டோறோலா உரிமையாளர் சங்கம்

மோட்டோறோலா தொலைபேசி உரிமையாளர்களின் நலனுக்காகவும், வளர்ச்சிக்காகவும் தொலைபேசி பாவனையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்குடனும் மருதனார்மடம், காங்கேசன்துறை வீதியில் மோட்டோறோலா தொலைத் தொடர்பு நிலைய உரிமையாளர் சங்கம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

## லயன்ஸ் கழக உதவி

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட கண் பரிசோதனை முகாமின்போது கண்டறியப்பட்ட - கண்பார்வைக் குறைவுடைய - வறுமைக்கோட்டின் கீழ்வாழும் - நூறு பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் வைத்து லயன் எஸ்.சச்சிதானந்தம் தலைமையில் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. லயன் எஸ்.பி.சிவஞானம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். சாவகச்சேரியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து கோண்டாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களுக்குத் தேவையான பாத்திரங்கள், உபகரணங்கள் என்பனவும் லயன்ஸ் கழகத்தினரால் வழங்கப்பட்டன.

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 10ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

### சங்கானை

| | |
|---|---|
| 513/128927/A | 513/146364/A |
| 513/146364/B | 513/146365/A |
| 513/146469/A | 513/146469/B |
| 513/146469/C | 513/146469/D |
| 513/146469/E | 513/146469/F |
| 513/150376/A | 513/150376/B |
| 513/150608/A | 513/150608/B |
| 513/150608/C | 513/150621/A |
| 513/150621/B | 513/150658/A |
| 513/150674/A | 513/150675/A |
| 513/150755/A | 513/150755/B |
| 513/151840/A | 513/151941/A |
| 513/151941/B | 513/151941/C |
| 513/152004/A | 513/152004/B |
| 513/152004/C | 513/152004/D |
| 513/152084/A | 513/152126/A |
| 513/152126/B | 513/152135/A |
| 513/152181/A | 513/152181/B |
| 513/152202/A | 513/152202/B |
| 513/153357/A | 513/153357/B |
| 513/153358/A | 513/153358/B |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 521/141668/A | 521/148751/A |
| 521/148766/A | 521/148767/A |
| 521/148767/B | 521/148767/C |
| 521/148775/A | 521/148775/B |
| 521/149538/A | 521/149545/A |
| 521/149545/B | 521/149585/A |
| 521/153073/A | 521/153073/B |
| 521/153093/A | 521/153093/B |
| 522/143497/A | 522/143497/B |
| 522/143497/C | 522/143497/D |
| 522/148744/A | 522/148744/B |
| 522/148753/A | 522/148753/B |
| 522/148753/C | 522/148762/A |
| 522/148765/A | 522/148765/B |
| 522/148765/C | 522/148765/D |
| 522/148770/A | 522/148770/B |
| 522/148770/C | 522/149533/A |
| 522/149533/B | 522/149533/C |
| 522/149533/D | 522/149533/E |
| 522/149533/F | 522/149538/A |
| 522/149565/A | 522/149565/B |
| 522/149565/C | 522/149762/A |
| 522/153082/A | 522/153082/B |
| 522/153082/C | 522/153082/D |
| 522/153087/A | 522/153087/B |
| 522/153090/A | 522/153090/B |
| 522/153090/C | 522/153090/D |

### நெடுந்தீவு

| | |
|---|---|
| SLN/13330/A | SLN/13330/B |
| SLN/13330/C | SLN/13331/A |
| SLN/13331/B | SLN/13440/A |
| SLN/13440/B | SLN/13522/A |
| SLN/13544/A | SLN/13545/A |
| SLN/13705/A | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 512/149916/A | 512/149916/B |
| 512/152310/A | 512/152310/B |
| 512/152435/A | 512/154071/A |
| 512/154116/A | 512/156205/A |
| 512/156205/B | 512/156223/A |
| 512/156223/B | 512/156234/A |
| 512/156287/A | 513/152169/A |

### ஊர்காவற்றுறை

| | |
|---|---|
| SLN/13377/A | SLN/13377/B |
| SLN/13419/A | SLN/13419/B |
| SLN/13419/C | SLN/13472/A |
| SLN/13472/B | SLN/13506/A |
| SLN/13513/A | SLN/13513/B |
| SLN/13516/A | SLN/13517/A |
| SLN/13525/A | SLN/13525/B |
| SLN/13529/A | SLN/13531/A |
| SLN/13531/B | SLN/13536/A |
| SLN/13536/B | SLN/13556/A |
| SLN/13557/A | SLN/13560/A |
| SLN/13560/B | SLN/13561/A |
| SLN/13570/A | SLN/13570/B |
| SLN/13571/A | SLN/13586/A |
| SLN/13657/A | SLN/13657/B |
| SLN/13657/C | SLN/13657/D |
| SLN/13657/E | SLN/13657/F |

### கோப்பாய்

| | |
|---|---|
| 511/149015/A | 511/149091/A |
| 511/149637/A | 511/149637/B |
| 511/149638/A | 511/149644/A |
| 511/149728/A | 511/149728/B |

### நல்லூர்

| | |
|---|---|
| 512/156697/A | 512/156697/B |
| 513/143853/A | 513/143853/B |
| 513/146465/A | 513/146465/B |
| 513/147261/A | 513/147261/B |
| 513/150352/A | 513/150352/B |
| 513/150352/C | 513/150438/A |
| 513/150482/A | 513/150482/B |
| 513/150482/C | 513/150483/A |
| 513/150483/B | 513/150526/A |
| 513/150527/A | 513/150527/B |
| 513/150527/C | 513/150602/A |
| 513/150644/A | 513/150783/A |
| 513/151810/A | 513/151897/A |
| 513/151897/B | 513/151985/A |
| 513/151985/B | 513/151985/C |
| 513/152038/A | 513/152042/A |
| 513/152042/B | 513/152042/C |
| 513/152042/D | 513/152042/E |
| 513/152042/F | 513/152057/A |
| 513/152101/A | 513/152195/A |
| 513/152195/B | 513/152215/A |
| 513/152254/A | 513/152254/B |
| 513/153419/A | 513/153419/B |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/138358/A | 513/138358/B |
| 513/144073/A | 513/144073/B |
| 513/144073/C | 513/148236/A |
| 513/150406/A | 513/150406/B |
| 513/150501/A | 513/150501/B |
| 513/150564/A | 513/150564/B |
| 513/150588/A | 513/150588/B |
| 513/150698/A | 513/151837/A |
| 513/151905/A | 513/151937/A |
| 513/151937/B | 513/152033/A |
| 513/152033/B | 513/152033/C |
| 513/152049/A | 513/152049/B |
| 513/152049/C | 513/152049/D |
| 513/152071/A | 513/152094/A |
| 513/152105/A | 513/152108/A |
| 513/152145/A | 513/152205/A |
| 513/152205/B | 513/152208/A |
| 513/152208/B | 513/152208/C |
| 513/153491/A | 513/153491/B |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 513/143894/A | 513/150408/A |
| 513/150408/B | 513/150493/A |
| 513/150505/A | 513/150505/B |
| 513/150505/C | 513/150530/A |
| 513/150530/B | 513/150618/A |
| 513/150634/A | 513/150634/B |
| 513/150634/C | 513/150634/D |
| 513/150759/A | 513/150759/B |
| 513/150786/A | 513/150786/B |
| 513/151974/A | 513/151974/B |
| 513/151974/C | 513/151974/D |
| 513/152134/A | 513/153207/A |
| 513/153207/B | 513/153450/A |
| 513/153450/B | |

### உடுவில்

| | |
|---|---|
| 513/141933/A | 513/143807/A |
| 513/146491/A | 513/150486/A |
| 513/150504/A | 513/150504/B |
| 513/150521/A | 513/150521/B |
| 513/150649/A | 513/150649/B |
| 513/150649/C | 513/150677/A |
| 513/150733/A | 513/150743/A |
| 513/150778/A | 513/150781/A |
| 513/150781/B | 513/150781/C |
| 513/150781/D | 513/151089/A |
| 513/151787/A | 513/151787/B |
| 513/151792/A | 513/151829/A |
| 513/151829/B | 513/151829/C |
| 513/151829/D | 513/151830/A |
| 513/151838/A | 513/151838/B |
| 513/151855/A | 513/151893/A |
| 513/151893/B | 513/151899/A |
| 513/151902/A | 513/151902/B |
| 513/151918/A | 513/151918/B |
| 513/151918/C | 513/151932/A |
| 513/152001/A | 513/152036/A |
| 513/152036/B | 513/152036/C |
| 513/152036/D | 513/152039/A |
| 513/152050/A | 513/152063/A |
| 513/152063/B | 513/152065/A |
| 513/152065/B | 513/152078/A |
| 513/152078/B | 513/152088/A |
| 513/152088/B | 513/152110/A |
| 513/152110/B | 513/152110/C |
| 513/152152/A | 513/152162/A |
| 513/152224/A | 513/155136/A |
| 513/155136/B | 513/155175/A |
| 513/155175/B | |

### வேலணை

| | |
|---|---|
| SLN/13380/A | SLN/13416/A |
| SLN/13416/B | SLN/13504/A |
| SLN/13504/B | SLN/13515/A |
| SLN/13519/A | SLN/13519/B |
| SLN/13519/C | SLN/13519/D |
| SLN/13520/A | SLN/13526/A |
| SLN/13533/A | SLN/13533/B |
| SLN/13543/A | SLN/13543/B |
| SLN/13546/A | SLN/13558/A |
| SLN/13572/A | SLN/13572/B |
| SLN/13572/C | SLN/13572/D |
| SLN/13572/E | SLN/13577/A |
| SLN/13577/B | SLN/13577/C |
| SLN/13577/D | SLN/13577/E |
| SLN/13581/A | SLN/13584/A |
| SLN/13588/A | SLN/13588/B |
| SLN/13588/C | SLN/13588/D |
| SLN/13588/E | |

## பளு தூக்கும் போட்டி

யாழ். மாவட்டத்தில் விளையாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் பளு தூக்கும் (Weight Lifting) போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் பிரதேச செயலர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தரிடம் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ -3)

அரசமைப்பைத் திருத்துவதற்கான

# சட்டமூலத்தை ஜனாதிபதி தானே சமர்ப்பித்தும் அது தோல்வியில் முடிவு!

## ஐ.தே.கட்சிச் செயலர் கூறுகிறார்

கொழும்பு,ஓக.15

நாட்டுக்கு ஒவ்வாத அரசமைப்புச் சட்டத்தை மக்கள் துணையுடனும் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடனும் வாக்கெடுப்புக்கு விடாமல் தடுக்க முடிந்தது யாரோ தவறாகக் கொடுத்த ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி நேரடியாக நாடாளுமன்றத்துக்குச் சென்று இதைச் சமர்ப்பித்தபோதிலும் அவர் படுதோல்வியையே சந்தித்துக்கொண்டார் என்று ஐ.தே.க. செயலாளர் காமினி அத்துக்கோறள தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கவின் குருநாகல் மாவட்ட செயற்குழுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை குருநாகல் மாநகர முதல்வரின் பணிமனையில் நடைபெற்றது. அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஐ.தே.க. உறுப்பினர்கள் பலரை வளைத்துப்போட முனைந்து தோல்வியை அடைந்துள்ளது. பல அமைச்சர்களும் இதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கொண்டுவர முடியாது எனத் தெரிவித்திருந்தனர். இதனால் தாங்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாமலேயே இதனை நிறைவேற்ற முடியும் என்று அண்மையில் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் ஜனாதிபதி கூறியுள்ளமை உயர் நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாக உள்ளது.

எதிர்வரும் தேர்தலில் வன்முறை மூலம் வெற்றிபெற்று முழு நாடாளுமன்றத்தையும் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றி அரசமைப்பைக் கொண்டுவருவதுதான் ஜனாதிபதியின் எண்ணமாகும்.

வெளிநாட்டு கண்காணிப்பாளர்களைக் கொண்டுவருவது தொடர்பான தேர்தல் ஆணையாளரின் கருத்தில் எமக்குத் திருப்தியில்லை. நான் ஜிம்மி கார்ட்டர் மன்றில் இருந்து அழைக்கவேண்டும் என்று கோரியுள்ளேன். அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்று தேர்தல் ஆணையாளர் கூறினார். சிம்பாப்வே தேர்தல் கண்காணிப்புக்குச் சென்றவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை. ஆனால் அவர்கள் கடமையை ஒழுங்காகச் செய்தனர்.

ஐ.தே.க. பதவிக்கு வந்தால் சமுர்த்தி மேலும் பல நன்மைகளுடன் தொடர அனுமதி வழங்கப்படும். பொ.ஐ.மு. வந்தால் எல்லாம் நிறுத்தப்படும். அண்மையில் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் "பண்டங்கள் சேவைகள் வரியை 18 வீதமாக அதிகரிக்க வேண்டும்; ஆனால் நான் 12.5 வீதமாக தொடர்ந்தும் வைத்திருக்கின்றேன்" என்று ஜனாதிபதி கூறியுள்ளார். இந்தக் கூற்றில் இருந்து ஜி.எஸ்.ரி. அதிகரிக்கப்படும் என்ற உண்மை தெளிவாகின்றது - என்றார்.

## 180 மீற்றர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டார்.

இந்தக் கோபுரங்களை அமைப்பதற்கு 12கோடி ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் 150 மீற்றர் கோபுரம் வெற்றிகரமாக ஸ்தாபிக்கப்பட்டால், மன்னார் கோபுரத்தின் உதவியின்றி மடுகந்தையிலுள்ள தொலைத்தொடர்புக் கோபுரத்துடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும் -

அதன் மூலம் குடாநாட்டில் தொலைபேசிச் சேவையைத் துல்லியமான அளவுக்கு உயர்த்தவும் -

வாய்ப்பிருப்பதாகவும் அவர் சொன்னார்.

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் ஆனையிறவிலிருந்த தொலைத் தொடர்புக் கோபுரம் தகர்க்கப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணத்துக்கும் வெளியிடங்களுக்குமான தொலைபேசிச்சேவை ஸ்தம்பிதம் அடைந்தது தெரிந்ததே.

இந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்காக 30 இணைப்புக்களைக் கொண்ட - செய்மதி மூலமான - சேவை முறை ஆறு கோடி ரூபா செலவில் செயற்படுத்தப்பட்டது.

நுண் அலை மூலம் குடாநாட்டுக்கும், குடாநாட்டிலிருந்தும் ஒரே நேரத்தில் மொத்தம் 180அழைப்புக்களைப் பெறக்கூடியதாக 180 இணைப்புக்கள் தற்போது மேலதிகமாகவும் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்குமான தொலைபேசிச் சேவையில் இருந்த நெருக்கடி ஓரளவு குறைக்கப்பட்டுள்ளது.

ஆனால் குடாநாட்டிலுள்ள இரண்டாயிரத்து ஐந்நூறு வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தற்போதுள்ள வசதிகள் போதுமானவையல்ல என்று எஸ். கனகசூரியர் தெரிவித்தார். (உ)

## குடும்பஸ்தர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியாபாரியின் வீட்டுக்குச் சென்ற கடற்படையினர் விறகு வியாபாரியையும் அவரது குடும்பத்தவர்களையும் பலமாகத் தாக்கினர் எனவும் - கூறப்படுகின்றது.

இதேவேளை இச்சம்பவம் குறித்து தீவுப்பகுதிக்கான கடற்படைக் கட்டளை அதிகாரியிடம் தான் முறையிட்டதாகவும் -

இத குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தன்னிடம் அவர் உறுதியளித்துள்ளார் எனவும் -

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளருமான என்.மதனராஜா தெரிவித்தார். (உ-7)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

சங்கானை,ஓக.15

சங்கானைப் பகுதியில் கட்டாக்காலிகளாகத் திரிந்த பல நாய்கள் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டன.

சங்கானைச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.இராசதுரையும் பிரதேச சபை அலுவலக ஊழியர்களும் இணைந்து இந்நடவடிக்கையை மேற்கொண்டனர். (க-29)

நாட்டுக்கு மிகப் பாதிப்பை ஏற்படுத்தும்

# அரசமைப்புச் சீர்திருத்த நகலுக்கு எக்காலத்திலும் இடமளிக்கக்கூடாது

## மல்வத்தை பீடாதிபதி கூறுகின்றார்

கொழும்பு,ஓக.15

நாட்டைப் பாதிக்கக்கூடிய மிக மோசமான அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டத்தை எதிர்காலத்தில் மீண்டும் அரசு நிறைவேற்ற எடுக்கக் கூடிய முயற்சிகளை முறியடிப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் ஐக்கியமாகி கூட்டு முயற்சியில் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு பகிரங்க அழைப்பு விடுத்திருக்கின்றார் மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் வண.றம்புக்வெல ஸ்ரீவிபாஸி தேரர்.

ஆகக்குறைந்தது உத்தேச அரசமைப்புச் சட்டம் சூழப்பும் போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நெருக்கடிகளை எதிர்கொள்வதற்காயினும் அரசியற் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்று தீவிர ஆலோசனை ஒன்றையும் அவர் வெளியிட்டார்.

டாக்டர் ஹரிச்சந்திரவிஜேதுங்க தலைமையிலான பூமி புத்திரக்கட்சியின் பிரதிநிதிகளைக் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்த போதே, மல்வத்தை பீடாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசின் உத்தேச அரசமைப்புச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்ததாக பல்வேறு அரசியல் கட்சிகள், நிறுவனங்கள், மகாசங்கம் போன்றவைற்றுக்கும் -

சர்ச்சைக்குரிய சட்ட நகலான அரசமைப்புச் சீர்திருத்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்திலிருந்து வாபஸ் பெற்றதாக அரசுக்கும் -

வண.விபாஸி தேரர் நன்றி தெரிவித்தார்.

சுதந்திரத்தின் பின்னான கடந்த ஐம்பது ஆண்டு காலத்தில் நமது மக்களிடையே ஒற்றுமையின்மை காரணமாக நாம் எதையும் சாதிக்க முடியாமல் போய்விட்டது. கட்சி அரசியல்தான்எமது பெரிய தலைவிதி.

- இப்படி விபாஸி தேரர் மேலும் தெரிவித்தார். (உ)

## பௌத்த நாட்டை.....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் புஷ்பமாலா இரியகொல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதியைச் சூழவுள்ளவர்கள் அவரை ஏமாற்றிப் பிழைப்பு நடத்துகிறார்கள்.

தமிழ் மக்கள் கேட்காத பல அதிகாரங்களை புலிகளுக்கு வழங்கி அவர்களைப் பலமடையச் செய்வதில்தான் ஜனாதிபதி முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார். அதன் மூலம் இந்த நாட்டில் உள்ள பௌத்தர்களின் ஆதிக்கத்தைப் பலவீனப் படுத்துவதே அவரது நோக்கமாகும் - என்றார் அவர். (உ-3-20)

## ஷாஜகானின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்தது.

இதேவேளை -

யாழ்.பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸ் குழு ஒன்று நேற்று மாலை யாழ். ஆஸ்பத்திரிக்குச் சென்று ஷாஜகானிடமும் அவரது வார்ட்டில் நின்ற ஏனைய பல்கலைக் கழக மாணவர்கள், உறவினர்களிடமும் வாக்குமூலங்களைப் பதிவு செய்தது.

தும்மைத் தாக்கியோரின் பெயர் விவரங்களை ஷாஜகான் தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

இதற்கிடையில் பல்கலைக்கழகச் சுற்றாடலில் வைத்து ஷாஜகான் தாக்கப்பட்டதை அடுத்து எழுந்த பிரச்சினைகளினால் ஏற்பட்ட பதற்றத்தைத் தணிப்பது குறித்து யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களும் கூடி ஆராய்ந்தனர்.

இந்தக் கூட்டத்தில் பீட ரீதியாக எழுந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்டபோதும் ஷாஜகான் தாக்கப்பட்ட பிரச்சினை குறித்து எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-5-10)

## மணிக்கூட்டுக் கோபுரம்

பண்ணாகம் விசுவர்த்தனை முருகமூர்த்தி ஆலயத்தில் மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது. (இ-135)

## யுத்தத்தை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றைக் கொள்வனவு செய்து வருகின்றோம். மேலும் தேவையான ஆயுதங்களை வாங்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அவை கிடைத்ததும் யுத்தத்தை முன்னெடுத்துப் புலிகளை ஒழித்துச் சமாதானத்தை நிலைநாட்டுவோம் - என்றார்.

(ஹொரணையில் நடைபெற்ற மற்றொரு நிகழ்ச்சியில் பிரதமர் ஆற்றிய உரை இரண்டாம் பக்கத்தில்). (உ-3)


வடமராட்சியில்......
நா.க. தமிழிந்திரன்
தமிழ்
நாளை
ஆரம்பம்:
16-08-2000 (புதன்)
2002 A/L மு.ப. 8.00
2001 A/L மு.ப. 9.00
இ(அ)லகு மீட்டல்
கிறிஸ்ரல் சென்ரர்,
நெல்லியடி. (77292)


# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் கடமைபுரியும் சக ஊழியர்
கோபி சங்கரின் (சங்கர்)
அன்புச் சகோதரி
**செல்வி T.யசோதா**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*உரிமையாளரும், ஊழியர்களும்*
*சுப்பஸோ வீடியோ ஓடியோ*
*அன்ட் கலர் லாப்.*

(C/12502)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தம்பிஐயா அழகம்மா

சுதுமலை கிழக்கு மானிப்பாயைச் சேர்ந்த திருமதி தம்பிஐயா அழகம்மா நேற்று (14-08-2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லப்பா - தங்கம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், Dr.அருமைத்துரை (வைத்திய அதிகாரி, நவாலி அரசினர் வைத்திய சாலை) இராசலட்சுமி, சின்னத்தம்பி, அன்னலட்சுமி, சிவபாலன், சந்திரபாலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மாவதி, சுந்தரலிங்கம் (ப.நோ.கூ.சங்கம் - சுன்னாகம்), நீலாம்பிகை, பத்மநாதன், சிவகாமி, மங்களேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அரிகரன், யதீஸ்குமார் (இறுதிவருட வர்த்தக முகாமைத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்), யாழினி, இரதாயினி, பார்த்தீபன், கஜானனன், சானுஜன், சாதுசான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், நாகராசா, சின்னத்துரை மற்றும் சுப்பிரமணியம் (இளைப்பாறிய ஆசிரியர்), நல்லம்மா (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-08-2000) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் தாவடி இந்துமயானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr.அருமைத்துரை
(மகன்)

*சுதுமலை கிழக்கு,*
*மானிப்பாய்.*

(C/12504)

## தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்

(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி)

மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவரும், பிள்ளையார் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவருமான தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம் (இளைப்பாறிய பிரதி முகாமையாளர்,மக்கள் வங்கி, கன்னாதிட்டி) அவர்கள் நேற்று (14-08-2000) திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அனுஷயாதேவியின் அன்புக் கணவரும், சிவகுமார் (பிரான்ஸ்), யசோதரா (பிரான்ஸ்), ராஜ்குமார் (கண்ணன் - I.B.M.S) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், வத்சலா (கொழும்பு), மங்களராஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், புவனசுந்தரி (வவுனியா), குணசுந்தரி (இந்தியா), ஞானசுந்தரி (பிரான்ஸ்), சற்குணசுந்தரி (கனடா), சண்பகசுந்தரம் (வவுனியா), ஆனந்தசுந்தரம் (வவுனியா) கதிர்காமசுந்தரம் (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சித்திராங்கராஜா (முல்லைத்தீவு), சிவதாஸன் (ஆசிரியர்,யா/இந்துக்கல்லூரி), சுசிலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தர்சன், தர்சிகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-08-2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
ராஜ்குமார்
(மகன்)

*பிள்ளையார் வீதி,*
*திருநெல்வேலி.*

(C/12505)


மலிவு விற்பனை.....! மலிவு விற்பனை.....!
காவேரி சில்க்ஸ்
ஸ்தாபனத்தாரின்
மாபெரும் மலிவு விற்பனை
அனைத்து ரக ஜவுளித் தினுசுகளையும் நீங்கள் தெரிவுசெய்திட விரையுங்கள்!
காவேரி சில்க்ஸ், யாழ்ப்பாணம்.
காவேரி சில்க்ஸ், குளப்பிட்டிச் சந்தி. (உயரப்புலம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில்)
SALE! SALE! SALE! SALE!
(C/12499)



இன்றைய வீடியோ CD வெளியீடு
பிரபுதேவா, மீனா
டபிள்ஸ்
பிரஷாந்தின் நடிப்பில்
பார்த்தேன் ரசித்தேன்
திரையரங்குகளுக்கு முன்னுரிமை
அடுத்த வெளியீடு
ரஜினிகாந்த் நடித்த
பெத்தராயுடு
விக்னேஷ் நடித்த
திருவிழா
புதிய போஸ்டர் விற்பனைக்குண்டு
விஷ்ணு வீடியோ,
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில்.
(C/12503)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15-08-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.